
# சமூகப் பிரச்சினைகள்

## சில சமூகவியல் குறிப்புகள்

53



20

ந. மயூரரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பிரச்சினைகள்

## சில சமூகவியல் குறிப்புகள்

ந.மயூரரூபன்

எழினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1st Book from Ezhini

**Samooka Pirachchinaikal**
*Sila Samookaviyal Kurippukal*
*by: N.Majuraroopan*
*First Edition: April 2012*
*No of Pages :68+ix*
*Price Rs:180/-*
*ISBN: 978-955-54304-0-1*
*Printed at : Harikanan (Pvt.)Ltd.*
*Published by: Ezhini*
*Text Copyright : Author*
*Contact info :*
N.Majuraroopan,
Old Police Station Road,
Valvetty,
Valvettithurai,
Jaffna.

*Phone: 021 205 5014*
*E-mail: ammank16@yahoo.com*

எழினியின் 1வது புத்தகம்

சமூகப் பிரச்சினைகள்
சில சமூகவியல் குறிப்புகள்
ஆசிரியர் : ந.மயூரரூபன்
முதற்பதிப்பு : ஏப்ரல் 2012
பக்கங்கள்: 68+ix
விலை :180/-
ISBN: 978-955-54304-0-1
அச்சு : கரிகணன் பிறைவேட் லிமிடெட்,
வெளியீடு : எழினி
எழுத்துக் காப்புரிமை : ஆசிரியருக்கு
தொடர்பு :
ந.மயூரரூபன்,
பழைய பொலிஸ் நிலைய வீதி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 205 5014
மின்னஞ்சல் : ammank16@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

எங்களுக்காய் வாழும்
அப்பா நவரத்தினத்திற்கும்,
அம்மா கற்பகதேவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ந.மயூரரூபன்**

எழுதுவதிலும், வாசிப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டவர். சமூகவியலில் தனது முதநிலைபட்டத்தை பெற்றுக்கொண்டவர். மார்ச் 14, 1978 பிறந்தார். பெற்றோர் சி. நவரத்தினம், ந.கற்பகதேவி. மனைவி ஜெயலக்ஷ்மி, மகள் அன்பெழினி. சமூகவியல்சார் கட்டுரைகளுடன் கவிதைகள், சிறுகதைகள் எழுதி வருகின்றார். நாடகத்திலும் ஆர்வம் உடையவர். வடமராட்சி கிழக்கு அம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வல்வெட்டியில் வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள் குறித்து ...

சமூகவியல் இன்றைய அறிவுத் துறைகள் யாவற்றுடனும் ஆழமாக இணைந்து நிற்கின்றது. அதன் கிளைகள் வியாபித்து வளர்ந் துள்ளன. எத்தனை கிளைகள் அமைந்த போதிலும் ஒரு துறையின் அறிவுப் பரப்பானது அதன் தூய மற்றும் பிரயோக அம்சங்களுடன் தான் வளர்ந்து வந்துள்ளது.

சமூகவியலின் பிரயோக அறிவினைக் குவிமையப்படுத்திய தாகத்தான் இந்த நூல் அமைகின்றது. சமூகப் பிரச்சினைகளில் சில எரியும் பிரச்சினைகளை இந்த நூல் தனது உள்ளடக்கமாகக் கொண் டுள்ளது.

மயூரரூபன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியற் பட்டதாரி தனது பட்டப்படிப்பின் பின்னர் இரண்டு கல்வி யாண்டுகளில் உதவி விரிவுரையாளராகச் சமூகவியல் துறையில் பணி புரிந்தார். அந்தக் காலப் பகுதிகளில் சமூக விவகாரங்களைக் கற்பிப்பதில் ஆர்வமுடை யவராக இருந்தார். அதன் விளைவாக அவர் எழுதிய கட்டுரைகள் இந்த நூலில் இடம்பெறுகின்றன.

இங்கு இடம்பெறும் சமூகவிவகாரங்கள் தொடர்பான இரண்டு அடிப்படையான விளக்கங்களைத் தருகின்றார். ஒன்று அந்த விவகாரம் தொடர்பான கோட்பாடு மற்றும் எண்ணக்கரு சார்ந்த விடயங்கள். மற்றது அதன் சமகாலப் போக்குகள் சார்ந்த விடயங்கள். இதனால், சமூகவிவகாரங்களைச் சமூகவியல் கண்கொண்டு பார்ப் பதற்கான வாய்ப்பினை இந்தச் சிறு நூல் தருகின்றது.

மயூரரூபனிடம் பத்திரிகைத்துறை சார்ந்த அனுபவம் உள்ளது. இதனால், ஒரு விவகாரம் சார்ந்த கோட்பாடு மற்றும் எண்ணக்கரு விளக்கங்களை ஜனரஞ்சகப்படுத்தி விவகாரங்களை அணுகும் போக்கு இறுதியாக அமைந்த குறிப்புக்களில் இடம்பெற்றுள்ளன. இதனால், சமூகவிவகாரங்கள் தொடர்பான பொதுநிலை வாசிப்புக்கான வாய்ப்பு உருவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் மிகுந்த இலக்கிய நாட்டம் உடையவர் சிறுகதை, கவிதைத்துறைகளில் அதிக ஆர்வம் உள்ளவர். புனைவு ஆக்கங்களுக்கு அப்பால் தான் கற்றுக் கொண்ட அறிவியல் துறைசார்ந்த கட்டுரைகளை எழுதிவந்துள்ளார். எனினும், இதுவே அவரின் முதல் நூலாகின்றது.

இந்த நூல் தன்னகத்தே கொண்ட கோட்பாடு மற்றும் எண்ணக்கரு ரீதியான விளக்கங்களால் சமூகவியலைக் கற்கும் மாணவர் கட்குப் பயன்படக்கூடிய அதேவேளை, சமூக விவகாரங்கள் தொடர்பான பொதுநிலை வாசிப்புக்கும் உதவுகின்றது.

மயூரரூபனின் இந்த நூலாக்க முயற்சிக்கு வாழ்த்துக் கூறும் அதே வேளை, அவர் சமூகவியல் துறைசார் அறிவை மேலும் வளர்த்து விரிவும் ஆழமும் மிக்க இன்னும் பல எழுத்துக்களைத் தருவார் என்ற எதிர் பார்ப்பும் உள்ளது.


அன்புடன்

**இ.இராஜேஸ்கண்ணன்,**

விரிவுரையாளர், சமூகவியல்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகளுக்கு முன்

ஒரு தனி மனிதனின் வாழ்க்கை என்பது அவனுக்குரிய தனியான விடயங்கள் அல்ல. அவனது குழு சார்ந்த, சமூகம் சார்ந்த அனைத்துக் கூறுகளையும் உள்வாங்கியதே.

சமூகப் பிரச்சினை ஒன்றின் இறுதிப் புள்ளி தனியனிடம் மட்டும் போய் முடிவதல்ல. சமூகத்தின் கூறுகளின் அடிப்படைகளை அது அசைத்து பார்க்க வேண்டும்.

சமூகவியல் கற்கை சமூகப் பிரச்சினைகளை அறிகை சார் ஆய்வுநிலைகளில் புரிந்து கொள்வதற்குரிய அடிப்படைகளைத் தருகின்றது. இயல்பாக அனைவருக்கும் இருக்கக் கூடிய சமூக அக்கறையுடன் முறையியல் சார்ந்த அணுகுமுறை தரும் கற்கைப் பயில்வு சமூகப் பிரச்சினைகளுக்கான சரியான தீர்வைக் கண்டடையும், பாதையை உருவாக்குகின்றது.

நான் சமூகவியல் பாடத்தை சிறப்புக் கற்கையாகக் கற்றுக்கொண்ட போதும், இரண்டு வருடங்கள் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றியபோதும், கற்கை நிலையிலும், ஆய்வு நிலையிலும் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டேன். சமூகப் பிரச்சினை என்ற இயங்கியல் தன்மை கொண்ட பாடப்பரப்பை விரிவுரையாற்றுகின்ற வாய்ப்பு இந்த புத்தகத்திற்கான தூண்டுதலாக அமைந்தது.

இதற்கான கட்டுரைகளில் எனது மாணவர்களின் பங்கு மிகையானது. குறிப்பாக சமூகவியல் துறையில் நான் வளர்ந்த சூழல், என்னை ஊக்குவித்தது. பேராசிரியர் நா.சண்முகலிங்கன் மற்றும் நான் கடமையாற்றியபோது பதில்துறைத் தலைவராக இருந்த கே.ரி.கணேசலிங்கம் ஆகியோரது தூண்டுதல் நன்றியுடன் நினைக்கத்தக்கது. விரிவுரையாளர்களான பகீரதி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்திற்கான அணிந்துரையையும், ஆலோசனைகளையும், தந்துதவிய இ.இராஜேஸ்கண்ணன் அவர்களுக்கும் நன்றிகள். அத்துடன் இப்புத்தகத்தை அழகுடன் அச்சிட்டுத்தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்திற்கும் எனது நன்றிகள்.

அமெரிக்க ஐரோப்பிய புலங்களில் வளர்ந்து வருகின்ற சமூகவியலின் செல்வாக்கினைக் கடந்து தற்பொழுது தமிழ்ச் சூழலில் எங்களுக்கான சமூகவியல் மிகுந்த முனைப்புடன் கவனம் பெற்றுள்ளது. அதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இடம் தனித்துவமானது, நிலையானது.

தமிழில் சமூகவியலை எழுதுதலின் அவசியம் அனைவராலும் உணரப்படுகிறது. எனது எழுத்துகளுக்கான ஆரம்பப் புள்ளியாக இச்சிறு புத்தகத்தினை கருதுகிறேன். ஆழமான தேடலும், நுண்ணிய பார்வையும் இன்னமும் தேவை என்பதை இச்சிறு புத்தக அனுபவம் எனக்கு உணர்த்தியுள்ளது.

அன்புடன்
ந.மயூரரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.....


| | |
|---|---|
| குறிப்புகளுக்கான அறிமுகம் | *01* |
| முதுமையாதல் | *11* |
| இனத்துவம் | *20* |
| எல்லை மீறும் மது | *26* |
| குற்ற நடத்தை | *36* |
| பெண்களுக்கெதிரான வன்முறை | *43* |
| தற்கொலை | *49* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகளுக்கான அறிமுகம்

சமூகவியல் சிந்தனையின் அடிப்படைத் தேவையினை இன்றைய சமூக இயங்கியல் முறைமை வேண்டி நிற்கிறது. சமூகப் பிரச்சினைகள் அதிகரிக்கின்றபோது அவற்றைத் தீர்ப்பதற்கான உபாயங்களும் தோற்றங்கொள்கின்றன.

மில் கூறுகின்ற "எமது வாழ்வை, வாழ்வின் நம்பிக்கைகளை விளங்கிக்கொள்வது அல்லது விளங்கிக்கொள்வதற்கான வல்லமை யினை தருகின்ற அறிவு" அவசியமாகின்றது. சமூகத்தைப் பார்க்கின்ற குறுகிய எல்லைப்படுத்தப்பட்ட பார்வையிலிருந்து ஒரு விரிந்த தளத்திற்கு போகின்ற அறிவு நிலையை சமூகவியல் தருகின்றது.

மிக முக்கியமான சமூகப் பிரச்சினை என்ன எனும் கேள்வி எழுகின்றபோது பலவிதமான பதில்கள் எமக்கு கிடைக்கின்றன. வறுமை, வேலையின்மை, எயிட்ஸ், தீவிரவாதம், குற்றம், போதைக்கு அடிமையாதல் என்பன அவற்றில் சில.

**அனைத்துமே சமூகப் பிரச்சினைகள் தானா?**

இங்கு ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. சமூக நிலைமைகள் அனைத்துமே சமூகப்பிரச்சினைகள் ஆகமுடிகிறது. இவற்றில் எவற்றுக்கு அல்லது எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது அவர்களின் சமூக நிலைமைகள் மற்றும் அனுபவங்களின் அளவீட்டின் பேறாகவே அமையும். மற்றைய துறைகளைப் போலன்றி சமூகவியல் எங்களுக்கு சுய உணர்வையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது. எங்களுக்கு ஏற்படுகின்ற சுய அனுபவங்கள் சமூக அழுத்தங்கள் அல்லது சமூக கட்டமைப்புக் களில் தங்கியிருக்கிறது என்பதை நாங்கள் விளங்கிக்கொள்கிறோம்.

சமூகவியல் என்பது சமூகக் கட்டமைப்பு மற்றும் தனியன் பற்றிய முறைமைசார் கற்கை. ஒரு சமூகவியளாளன் தனியனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்குமிடையிலான உறவைப் பரீட்சிக்கிறான். ஒரு சமூக விஞ்ஞானமாக சமூகவியல், சமூகப் பிரச்சினைக்ளின் விளைவு களைப் புரிந்துகொள்ளும் புறவயமானதும் (Objective) முறைமை சார்ந்ததுமான (Systematic) அணுகுமுறைகளைத் தருகிறது.

சமூகவியல் பார்வையில், பிரச்சினைகளும் தீர்வுகளும் தனியனுடன் மட்டும் தொடர்புபட்டதல்ல என்பதையும் அது எமது சமூகத்தின் சமூகக்கட்டமைப்புடன் மிகப் பிரதானமான தொடர்பைக் கொண்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும். சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் இரண்டு பிரதான மூலங்களைக் கொண்டிருப்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

1. புறவய நிலை (Objective Condition)
   சமூகப் பிரச்சினைகளின் சில கூறுகளை ஏற்கனவே அறியப் பட்ட அளவீடுகள் மற்றும் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் உணர்ந்து கொள்ள முடியும்.

   உ+ம் : கருக்கலைப்பு எனும் சமூகப் பிரச்சினை

2. அகவய நிலை (Subjective Condition)
   இது சில மனிதர்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்களின் விளைவானது. பெண்ணாகப் பிறந்ததனால் வேண்டப்படாத குழந்தையாக உணரும் பெண்ணின் நெருக்கீடுகள் இங்கு எடுத்துக்காட்டாக சொல்ல முடியும்.

**சமூகப்பிரச்சினை**

குறித்த ஒரு சமூகக்குழுவினரால் தங்கள் எல்லோருக்குமான பிரச்சினையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பிரச்சினைகள் சமூகப்பிரச்சினைகளாக அமைகின்றன. இனத்துவப் பாரபட்சம், குற்றச் செயல்களின் அதிகரிப்பு, மதுபாவனை, முதுமை, வேலையின்மை போன்றவற்றை சில எடுத்துக்காட்டுகளாக கொள்ளமுடியும்.

இங்கு, பிரச்சினைகளை குறித்த சமூகம், காலம், வெளி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே புரிந்துகொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். எமக்கு முந்தைய தலைமுறையினருக்கு இருந்த பிரச்சினைகள் எமக்கு இருப்பதில்லை. எமக்கு இருக்கின்ற பிரச்சினைகள் முன்னைய தலைமுறையினருக்கு இருந்திருக்க வேண்டுமென்பதில்லை. இன்று நாம் அறிந்திராத பிரச்சினை கூட எதிர்காலத்தில் ஒரு பிரச்சினையாக தோற்றங்கொள்ள முடியும். சில பிரச்சினைகள் சமூகத்தால் அறியப்படாமலேயே போக முடியும்.

அடிப்படையில் பிரச்சினைகளை இரண்டு நிலையில் நோக்க முடியும்.

1. தனிப்பட்ட பிரச்சினை (Private trouble)
2. சமூகப் பிரச்சினை (Social issue)

ஒரு தனியனுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கமுடியும். தனியனின் இருப்புக்கமைய அது வேறுபடவும் முடியும். ஆனால் சமூகப் பிரச்சினையென்பது குறித்த சமூகத்தினர் எதிர்கொள்ளும் பொதுப் பிரச்சினையாக அமையும்.

**தனிப்பட்ட பிரச்சினை ⟶ பொதுப்பிரச்சினை**

இங்கு நாம் விளங்கிக்கொள்ளவேண்டிய மிக அடிப்படை யான விடயம், ஒரு தனியனின் பிரச்சினை பொதுப் பிரச்சனை யாகும் வடிவத்தையே ஒரு தனியனுக்கு இருக்கக்கூடிய வேலை யில்லாப் பிரச்சினை எனும் கூறு, குறித்த சமூகத்தினரால் தங்களுக் கான பிரச்சினையாக உணரப்படுகின்ற போது அது பொதுப் பிரச்சினையாகிறது.

**சமூகப் பிரச்சினைகளின் உறவு**

அடிப்படையில் தெரிந்த விடயம் ஒன்று, சமூகப் பிரச்சினைகளின் உறவு என்பது அதன் சமூக நிலைமைகளுடனே யானது என்பதுதான். குறிப்பாக சமூகத்தின் விழுமியங்களில் சமூகப் பிரச்சினைகள் தங்கியிருக்கின்றன. விழுமியத்துடனான உறவுநிலையைப் போன்றுதான் குறித்த சமூகத்தின் பண்பாட்டுட னான உறவு நிலையும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் கட்டமைப்பைப் பேணுகின்ற இந்த அடிப் படைக் கூறுகளில் சமூகப் பிரச்சினைகள் தங்கியிருப்பதை நாம் எமது அனுபங்களினூடாக அறிந்து கொள்ள முடியும். ஒரு விடயம் பிரச்சினையாகுதலும், அதன் தீவிரத்தின் பெறுமானம் வேறுபடுதலும் இதன் பின்னணியிலேயே அமையும்.

### சமூகப் பிரச்சினைகளின் இயங்கியல்

சமூகப் பிரச்சினைகள் எப்போதும் இயங்கியல் தன்மை கொண்டது. சமூகத்தின் இயல்பு மாற்றங்களியானது. எனவே சமூகப் பிரச்சினைகளும் குறித்த மாற்றங்களை உள்வாங்கி நிலைத்தலற்ற இயல்பு நிலையையே கொண்டிருக்கும். சில நாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் கருக்கலைப்பு என்பதை அண்மைக்காலம் வரை சட்டத்திற்கு விரோதமான செயலாகவே அறிந்திருக்கிறோம். ஆனால் இப்போது அது சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் உள்ளதை அறிகிறோம்.

### சமூகப்பிரச்சினைகளை அறிந்துகொள்ளல்

- உண்மையில் அதிகளவான மக்கள் பிரச்சினை இருப்பதாக உணர்ந்து கொள்ளும் போது சமூகப்பிரச்சினையினை நாம் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.
- நிரூபணமற்ற கூற்றுக்களின் அடிப்படையில் பிரச்சினை இருப்பதாக உணருகின்ற நிலையும் உண்டு. குறிப்பாக அனுபவ நிலையற்று ஊடகங்கள் வாயிலாக குறித்த பிரச்சினையின் வடிவத்தை உணரும் நிலை.
- சமூகப் பிரச்சினைகள் பொதுநிலையில் கணிக்கப்படுகின்ற போதும் தனிப்பட்ட விழுமியங்களும் ஆர்வங்களும் இணைந்திருப்பதால் ஆளுக்கு ஆள் அல்லது குழுவுக்கு குழு வேறுபடுகின்ற வடிவங்களை கொண்டிருக்கும்.

  எடுத்துக்காட்டாக வறுமை என்பது தென்னிலங்கை, மலையகம், கிழக்கு, வடக்கு பகுதிகளில் வேறுபட்ட வடிவங்களை கொண்டிருக்கும்.
- சமூகப் பாதிப்பை யார் கூறுகின்றார் என்பது கவனத்திற் குரியது. குறிப்பிடத்தக்க அல்லது ஒருமித்த மக்களின் வெளிப்பாட்டையே சமூகவியல் வேண்டிநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மாற்றத்திற்கான செயற்பாடு.

பிரச்சினையிலிருந்து சமூக மாற்றத்திற்கான செயல்வடிவமே சமூகவியலாளர்களுக்கு அடிப்படையானது.

பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்ற போது குறித்த சமூகம் அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கான அடிப்படைகளை உருவாக்கிக் கொள்கிறது.

**உண்மையான சமூகப் பிரச்சினைகளை அடையாளப்படுத்தலும் வரையறுத்தலும்**

ஒரு சமூகப்பிரச்சினை உண்மையானது என இனங்காண்ப தற்கு மூன்று அணுகுமுறைகளை சமூகவியலாளர்கள் குறிப்பிடு கின்றார்கள்.

**1. பிரச்சினைகளுக்கான பெறுமதி**

குறித்த ஒரு பிரச்சினை தொடர்பான பொது விழிப்புணர்வு மற்றும் பொது அபிப்பிராயத்தின் தரம் என்பவற்றின் அடிப்படை யில் இதனை கணித்துக்கொள்ளமுடியும். பொது அபிப்பிராயம் என்பது சமூகத்தில் அதிகாரம் மிக்க ஆர்வக் குழுக்களால் வடிவமைக்கப்பட்டு அவர்களின் செல்வாக்குட் பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். குறித்த சமூக அல்லது நாட்டு மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள்

உ-ம்: பெரும்பான்மைத் தமிழர்களுக்கான பிரச்சினை, பெரும் பான்மை இலங்கையருக்கான பிரச்சினை.

**2. திருத்தப்படக்கூடிய நிபந்தனைகள்.**

சமூகப் பிரச்சினைகள் நிபந்தனைகளாக அமைந்து சமூகச் செயலால் உயர்வு நிலைக்கு கொண்டுவரக்கூடியவை. இவை விரும்பத்தகாத சமூக நிலைமைகளாக அடையாளம் காணப்படு கின்றன.

உ-ம்: இனத்துப் பாரபட்சம், சாதிக்கொடுமை

**3. எதிர்விளைவைத் தீர்மானித்தல்**

சமூகப்பிரச்சினைகள் அவற்றின் நிபந்தனைகளில் தனியன் கள் மீதும் சமூக நன்னடத்தை மீதும் எதிர்விளைவை ஏற்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லது என்பதை சமூகத்தின் இயக்கம் மற்றும் ஒழுங்கமைவு என்பவற்றின் மூலம் சமூகவியல் ஆய்வினால் இனங்காண முடியும். உ+ம்: யுத்தக் குற்றம்

**பிரச்சினைகளை அணுகும் முறைகள்**

சமூகப் பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதில் சமூகவியலாளர்கள் ஐந்து அணுகுமுறைகளை பயன்படுத்துகிறார்கள்.

1. நோயியல் நிலை (Pathology)
2. சமூக ஒழுங்கமைவின்மை (Social Disorganization)
3. விழுமிய முரண்பாடு (Value Conflict)
4. விலகல் நடத்தை (Deviant behaviour)
5. சுட்டி இனங்காட்டுதல் (Labelling)

**நோயியல் நிலை**

பிரச்சினைகளை அணுகுவதில் சமூகவியல் தளத்தில் பயன்படுத்தப்பட்ட முதலாவது அணுகு முறையாக இதனைச் சொல்லலாம். 1905-1918 காலப்பகுதியில் இது மிகவும் கவனம்பெற்ற அணுகுமுறையாக இருந்தது. சமூகத்தின் குறைபாடு எனும் நோய்வடிவத்தைக் கண்டுபிடிப்பதற்கு மருத்துவ துறையிடமிருந்து பெறப்பட்ட ஒரு வடிவமே இது.

ஒவ்வொரு தனியனையும் அவனது குறைபாட்டு நிலையில் வைத்து நோயியல் கூறாக இனங்காண முற்பட்ட அணுகுமுறை இதுவாகும். இது பிற்காலத்தில் செல்வாக் கிழந்து போனது.

**சமூக ஒழுங்கமைவின்மை**

சமூக வியல் ஒரு விஞ்ஞானக் கொள்கையாக கோட்பாட்டுத் திசையில் வளர்ச்சிபெற்றபோது சமூகப் பிரச்சினைகளை அணுகுவதற்கான குறிப்பிடத்தக்க அணுகுமுறையாக சமூக ஒருங்கமைவின்மை முக்கியத்துவம் பெற்றது. சமூகம் ஒன்று இயல்பாக இயங்குவதற்கு நியமங்கள், விழுமியங்கள், விதிகள் என்பன அடிப்படையாகின்றன.

சமூக வகிபங்குகளும் கோலங்களும் இந்த ஒழுங்கு நிலையிலிருந்து மாறுபடுகின்ற போது சமூக ஒழுங்கமைவின்மை ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வகைகளில் சமூக ஒழுங்கமைவின்மை இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு.

1. நியமமறுநிலை (Normlesness)
2. பண்பாட்டு முரண்பாடு (Cultural conflict)
3. உடைவு (breakdown)

**விழுமிய முரண்பாடு**

இருவகையான பண்பாட்டுக் கூறுகளின் தாக்கத்தால் ஏற்படும் விழுமிய முரண்பாட்டுப் பிரச்சனைகளை இனங்காணும் பிரயோகம்.

விழுமியம் தொடர்பான ஆர்வங்களே இதன் மையநிலைகளாக உள்ளன.

- கிராமம் எதிர் நகரம்
- இளைஞர் எதிர் வயோதிபர்
- சமயம்/இனம் எதிர் மற்றவர்கள்

என இரு எதிர்மாறிகளுக்கிடையிலான விழுமிய முரண்பாடுகளை சமூகங்களில் இனங்கண்டு கொள்ளலாம். இதன் விளைவாக பண்பாட்டுத்தேக்கம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உண்டு.

**விலகல் நடத்தை**

"சமூக நடிபங்கு" என்பதே இந்த விலகல் நடத்தைக்கான மையமாக உள்ளது. சமூகத்தால் எதிர்பார்க்கப்படும் ஒழுக்கம், நியமம் சார்ந்த நடத்தைகள் ஒரு தனியனிடம் இல்லாமல் சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட கண்டிக்கத்தக்க நடத்தைகள் காணப்படும்போது அது விலகல் நடத்தையாகிறது.

குறிப்பாக மரபை அனுசரிக்காதவர்களால் இவ்வகை நடத்தைகள் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். இங்கு குழு நியமங்களை விளக்கிக்கொள்ளல், சமூக மாற்றங்கள், விதிகள், சமூக நிறுவனங்கள், ஆர்வங்கள் என்பன முக்கிய சுட்டிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றன. விலகல் நடத்தைக்கான பின்னணிகளும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றன.

- உள உயிரியல் அம்சம்
- சமூக கட்டமைப்பு
- விலகல் பற்றிய இடைவினை நோக்கு

**சுட்டிஇனங்காட்டுதல்**

குறித்த சமூகத்தின் விதிகள், நியமங்களை அடிப்படையாகக்கொண்டு அதன்படி நடக்காதவர்களை இனங்காட்டிச் சுட்டும் முறை இது.

ஆனால் இதில் சில தவறான அணுகுமுறைகளும் உள்ளன. குறிப்பாக ஒருவரை முற்சார்பு நிலையில் சுட்டுதல் என்பதும் அவ்வாறான ஒருவர் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாது ஒதுக்கப்படும்போதும் இவ்வணுகுமுறையின் பலவீனத்தை உணர்ந்துகொள்ள முடியும்.

**சமூகப் பிரச்சினை மட்டங்கள்**

சமூகப்பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதில் சமூகவியலாளர்கள் இருவகையான வகைப்பாட்டு மட்டங்களை கையாளுகிறார்கள். சமூகப்பிரச்சினைகளினுடைய அடர்த்தித் தன்மைக்கேற்ப பிரச்சினைகள் அணுகப்படுகின்றன.

1. பருநிலை மட்டப் பிரச்சினைகள் (Macro level problems)
2. நுண்நிலை மட்டப் பிரச்சினைகள் (Micro level problems)

பிரச்சினையின் தன்மைக்கேற்றவகையில் அதனை அணுகுவதற்கான முறைகள் வேறுபட வேண்டும். கோட்பாட்டுக்காக பிரச்சினையின் தன்மைகளை எளிமையாக்கம் செய்யக்கூடாது என்பதை கவனத்திற் கொள்வது அவசியம்.

**பருநிலைப் பிரச்சினை**

சமூகப்பிரச்சினைகள் சமூக நிறுவனங்களிலிருந்து தோற்றம் கொள்வதற்கான சாத்தியங்களையே அதிகம் கொண்டுள்ளன. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுச் சமூகத்தினாலும் பிரச்சினையாக உணரப்படும் கூறுகள் பருநிலைப் பிரச்சினைகளாகின்றது.
இவை

பொருளாதாரக் கட்டமைப்பு
அரசியல் கட்டமைப்பு
தொழில்நுட்பக் கட்டமைப்பு
சமூகக்கட்டமைப்பு

என சமூக ஒழுங்கமைப்புக்குள் பேணப்படுகின்றன. இதன் பின்னணியில் உருவாகும் பிரச்சினைகளே பருநிலை மட்டத்தில் கணிக்கப்படுகின்றன.

உ+ம்: இனப்பிரச்சினை, பால்நிலைப் பிரச்சினை, முதுமையாதல், பெண்ணியம்

**நுண்நிலைப் பிரச்சினை**

ஒரு சமூக மட்டப்பிரச்சினை தனியனைப் பாதிக்கின்ற அதேநேரம் தனியனின் பிரச்சினைகள் சமூகமட்டப் பிரச்சினைகளுக்கான தோற்றுவாயாகவும் அமையும்.

இங்கு சமூகம் எதிர் தனியன்
சில தனியன்கள் எதிர் சமூகம்
என வரும் முரண்நிலை நுண்நிலைப் பிரச்சினைகளாகின்றன.
உ-ம்: குடும்பப் பிரச்சினைகள், தற்கொலை

**பிரச்சினைகளின் வட்டத்தினை இனங்காணல்**

பிரச்சினைகளை இனங்காணுதல் என்பது சமூகத்தின் இயங்கியல் தன்மைக்கேற்ப ஒரு பொதுநிலை சார்ந்து ஒரு பிரச்சினைகளின் வட்டமாக இனங்காணப்படமுடியும்.

1. பிரச்சினைகளுக்கான வரலாற்றுப் படிமுறை உணரப்படுதல்
2. பிரச்சினைகளுக்கான வட்டத்தின் தொடக்கப்புள்ளியை இனங்காணுதல்.

   (Richard Fuller Richardmyers இன் ஆய்வடிப்படையை கொண்டது) மக்கள், பிரச்சினை தங்களுக்கு இருக்கிறது என உணரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தீர்க்கமுடியாது என்பதையும்)

↓

மற்றவர்களுடன் தொடர்புகொள்ளல்

↓

பொது விவாதம் (பல்வேறு குழுக்களுடன்)

3) பிரச்சினை விவகாரமாகுதல் விவாதத்திற்குள்ளாதல் எனும் முறையில் இது, பிரச்சினை தொடர்பான கற்கைப் பயில்வாக அமையும். இங்கு,

- பிரச்சினைகள் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை
- பிரச்சினைகளை மையப்படுத்தி அரசியல் அமைப்பு நிர்வாக அமைப்பகளில் மாற்றங் களை செய்தல்.
- தீர்வுகளை பல்வேறு மட்டங்களிற்கு கொண்டுசென்று திட்டமிடுதல் - கொள்கை வகுத்தல்.

எனும் படிமுறையானது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கற்கைப் புலப்படிமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையாதல்

55 அல்லது 60வயது ஆகின்றபோது தொழில் சட்டத்தின் அடிப்படையில் ஒருவர் முதுமையடைந்துவிட்டார் என வேறு படுத்தப்படுவதை உணரமுடியும். அதேபோல் ஒரு குடும்பத்தில் 73 வயதுடையவர் இறந்துவிடுகின்ற போது அங்கு அதற்கு அடுத்த வயதிலுள்ளவர் தனது குடும்பத்தின் மூத்த அங்கத்தவர் என்ற நிலையை அடைகிறார் (அவரது வயது 47 ஆக இருந்த போதும்). இன்னொரு வகையில் எமது சமூக நடைமுறையின் செயற்பாடு களில் ஒருவரின் தேவையான வயது தீர்மானிக்கப்படுகிறது. சாரதி அனுமதிப் பத்திரம், வாக்களிக்கும் வயது, திருமணவயது என வயதெல்லைப் படுத்தல்கள் ஒரு வகையிலான வயதடைதலை சுட்டும் குறி காட்டிகளாக அமைகின்றன.

இப்படி வேறுபட்ட பார்வைகளில் வயது தொடர்பான எல்லைப்படுத்தல்களை விளங்கிக்கொள்ளலாம். சுருக்கமாக, ஒருவர் 60 வயது அடைகின்றபோது அல்லது தாத்தா/ பாட்டி ஆகும்போது அல்லது தமது பணியிலிருந்து இறுதியாக ஓய்வுபெறும் போது தாம் முதுமையடைந்துவிட்டதாக சிலர் நம்பு கின்றனர். மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் அடிப்படையில் முதுமை தொடர் பான எமது கருத்துநிலை மாறிவிட்டது. 70 வயதிலும்கூட ஒப்பீட்ட ளவில் மக்கள் இளமையோடிருப்பதை அவதானிக்க முடியும்.

அந்தவகையில் சமூகங்கள் முதுமையாதல் என்பதற்கான இரண்டு சமூக அர்த்தங்களை கோடிட்டுக்காட்டுகின்றன.

1. முதுமை/முதுமையாதலின் பல வேறுபடுகின்ற முறைசார் மற்றும் முறைசாரா சமூக விளக்கங்களை எமது சமூகங்கள் கொண்டிருக்கின்றன.
2. முதுமையாதலின் அர்த்தங்கள், விளக்கங்கள் அனுபவங்கள் என்பது பண்பாடு மற்றும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையாதலின் பரிமாணங்கள்

**பௌதீக ரீதியான முதுமையாதல்**

குறிப்பாக இது உடல் ரீதியான மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டது. தலைமுடி யின் நிறம் வெண்மையடைதல், தோல் சுருங்குதல், வம்சவிருத்தித் திறன் குறைவடைதல் என்பன குறிப்பிடக்கூடிய பௌதீக மாற்றங்களாகும்.

பௌதீக ரீதியான முதுமையாதலின் மாறிகள்




காட்டப்பட்ட வரைபில் கிடை அச்சு வயதடிப்படையிலான முதிர்ச்சியை சுட்டும், அதேநேரம் நிலைக்குத்து அச்சு உடல்சார் செயற்பாட்டு நிலையை குறிப்பிடுகிறது.

இங்கு பிறந்ததிலிருந்து முதிர்ச்சியடையும் பருவம்வரை ஒருவரின் உடற்செயற்பாடு சீரான ஏற்றத்துடன் செல்வதையும் முதிர்ச்சிப் பருவத்திலிருந்து வாழ்க்கையின் இறுதிப் (முதுமை) பகுதிவரை சீரான உடற்செயற்பாட்டை கொண்டிருப்பதனையும் இறுதிக்காலத்தில் மூன்று நிலைகளில் அவரின் உடற்செயற்பாடு அமைகிறது என்பதையும் ஒரு பொதுவான தளத்தில் தெளிவாக விளக்குவதை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உளரீதியான முதுமையாதல்**

இது குறித்த நபர்களின் ஆளுமையிலுள்ள மாற்றங்களின் போக்கினால் எட்டப்படுவது. அவர்களின் உளச் செயற்பாடு அவர்களிடம் முதுமையுணர்வைக் கொண்டுவருகிறது.

சில உளவியல் பரிமாணங்களால் தூண்டப்படும் மூளையின் செயற்பாடு காரணமாக உடலியல் மாற்றங்கள் சிலரில் ஏற்படுகிறது. இதன் விளைவுதான் உளரீதியான முதுமையாதல் என்பது. ஒரு முதிய நபருக்கு அவரது குடும்ப அமைப்பில் ஏற்படும் அனுபவங் களும், சமூகக் கட்டமைப்புக்குள் அவர் எதிர்நோக்கும், தலைமுறை வேறுபாடும், இவ்வகையான உளரீதியான முதுமையாதலை ஏற்படுத்தும் ஒரு காரணியாகக் கொள்ள முடியும். குறித்த நபருடன் இடைவினை கொள்ளும், சமூக அங்கத்தவர்களும், சமூகக் கூறுகளும், குறித்த நபரின் வயதடிப்படையிலான தோற்ற அடிப்படையிலான முதிர்வினை மீள மீள ஞாபகப்படுத்துபவர் களாக இருப்பார்கள். இதனால் குறித்த முதிய நபருக்கு தான் மூப்படைந்து விட்டேன் என்ற உளச்சூழல் ஏற்படுகிறது.

**சமூகரீதியான முதுமையாதல்**

குறிப்பாக பௌதீக, அறிகைசார் செயற்பாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாற்றங்களாக, பொதுமையான அம்சமாக இது காணப்படுகிறது.

இங்கு சமூக அர்த்தங்கள் சமூக கட்டமைப்பு, சமூகப் போக்கு என்பன இணைக்கப்பட்டுள்ளன. சமூகரீதியான முதுமையாதல் என்பது ஒரு பல்பரிமாணத்தன்மை கொண்டது. சமூக வகிபங்கின் இயங்கியல் தன்மை மற்றும் நடத்தை பற்றிய எதிர்பார்ப்புகளை வேண்டிநிற்பதாகும். அதே நேரத்தில் வளங்கள், வாய்ப்புக்கள் என்பன இங்கு சமூக விலக்குகளாகவே இவர்கள் முன்னே காணப்படு கின்றன.

**சனத்தொகை ரீதியான முதுமையாதல்**

சமூக கட்டுமானத்தின் கூறாக முதுமையாதல் இருக்கின்ற நிலையில் வயதானவர்களின் வகைப்பாட்டின் செறிவு சனத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பால் திரண்டதாகவே காணப்படுகிறது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் அதிக அங்கத்தவர்கள் காணப்படுகின்றபோது, அதில் பின்வரும் சமூக அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த நபர் முதியவராக அடையாளப்படுத்தப்படுகிறார். அது, குறித்த குடும்பத்தில் மூப்பின் அடிப்படையில், கல்வி அறிவின் அடிப்படையில் ஆரோக்கியத்தின் அடிப்படையில் ஒரு ஒப்புநோக்கத்தக்கதாக அமையும். இவ்வகையான அம்சங்கள் சனத்தொகை மாற்றங்களில் ஒரு தாக்கத்தையும், அதனூடான ஒரு வளர்ச்சியையும், ஏற்படுத்துகின்றது. இது அங்கத்தவர்களின் அடர்த்தியைக் கொண்டு கணிப்பிடப்படும் ஒன்றாக அமைகின்றது.

**வயதால் மக்களை வகைப்படுத்தல்**

மூன்று அடிப்படைகளில் மக்களை அவர்களின் வயதடிப் படையில் வகைப்படுத்த முடியும்.

1. கால ஒழுங்கு வயது (Chronological age)
   - இது காலத்தின் நீட்சியால் தீர்மானிக்கப்படுவது வயதின் இலகுவான அளவீட்டுமுறை, அத்துடன் நிர்வாகச் சிக்கல்களை இது குறைக்கிறது.

   உ ம்: வேலைக்கான வயது, ஓய்வு வயது)
   - கால ஒழுங்கு வயது சமூக நிகழ்வுகளுக்கான சமூக வகிபங்குகளை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படை நிலையில் பயன்படுகிறது.

   (உ-ம் : தந்தை, தாய், மாமா, )

2. செயற்பாட்டு வயது (Functional Age)

   இது கட்புலனாகும் நிலையில், ஒரு மனிதன் வயதானவனான இல்லையா என தீர்மானிப்பதற்கான முறைசாரா அளவீடு களைக் கொண்டது.

3. வாழ்க்கைக் கட்டம் (Life stage)

   வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளும் மாற்றங்களின் காலங் களால் தீர்மானிக் கப்படுவது. அதேபோல் வயதும் மாற்றத்திற்கான கால அளவுகளால் எல்லைப் படுத்தப்படு கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**முதுமையாதலின் சமூக நோக்குகள்**

யார் வயதானவர் என்பது தொடர்பான எங்கள் கருத்து நிலைகளில் சமூகச் செல்வாக்கினை நாம் உணரமுடியும். ஆந்தவகையில் இரண்டு நோக்குகள் இங்கு காட்டப்படுகின்றன.

1. சமூக முதுமையியல் (Social Gerentology)
2. முதுமையாதலின் சமூகவியல் (Sociology of Aging)

**1. சமூக முதுமையியல்**

இது பல்துறைசார்ந்த வடிவமாகும். குறிப்பாக முதுமையியல் என்பது முதியவர்களுக்கான மருத்துவப் பராமரிப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும்.




இங்கு ஆய்வு, கொள்கை, செயற்பாடு எனும் தளங்களில் சமூக முதுமையியல் கையாளப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. முதுமையாதலின் சமூகவியல்

சமூகவியல் நோக்கிலிருந்து முதுமையாதலை விளங்கிக் கொள்வதுடன் தொடர்புபட்டது. அத்துடன் செயற்பாட்டு நிலையில் சமூகவியலை படிப்பதற்கானது.

இங்கு ஒரு விடயம் தெளிவானது, வெற்று வெளியில் எந்த மாற்றங்களும் நிகழ்வ தில்லை.

மக்கள் பதிலளிப்பதற்கும், இயங்குவதற்கும் அவர்கள் மீது தாக்கம் ஏற்படுத்துவதற்கும் "சமூகம்" எனும் அடிப்படை விடயம் இருக்கிறது. அதன் கட்டமைப்பு, இயக்கம் முதுமையாதலில் எவ்வாறு பிணைந்திருக்கிறது என்பதை கற்கைநிலையில் பார்ப்பது முதுமையாதலின் சமூகவியலாகும்.

சமூக வாழ்வு என்பது ஒழுங்கமைக்கப்பட்டது. தனியன்களின் செயல்கள் மற்றும் நடத்தைகள் மீது வயது எவ்வகையான பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகிறது என்பது இங்கு கவனிக் கத்தக்கது.

## முதுமையாதலின் சமூக கோட்பாடுகள்

சமூகவியல் அடிப்படையில் முதுமையாதல் தொடர்பான ஆய்வுச்செயற்பாடுகளுக்கு சமூகவியல் கோட்பாடுகள் கையாளப்ப டுகின்றன. ஓர் அறிவு நிலை விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வகையான கோட்பாடுகள் துணை நிற்கின்றன.

### செயற்பாட்டுக் கோட்பாடு (Activity theory)

தனியன் எப்படி தனது சமூக வாழ்க்கையின் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு தனது வயது நிலைகளின் அடிப்படையில் தனது இருப்பை எதிர்கொள் கிறான், செயற்படுகிறான் என்பதனை நுண்நிலை மட்டத்தில் பார்க்கின்ற கோட்பாடாகும். மகனாக, மகளாக தந்தையாக/ தாயாக, தாத்தாவாக/பாட்டியாக, குடும் பத்தின் மூத்த தலை முறையாக அவர் மாற்றங்களை தமக்குள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கி தமது சமூக அமைப்புக்குள் இயங்கும் வகிபங்கினை நேர்நிலையில் பார்க்கமுடியும்.

**பரிமாற்றக் கோட்பாடு** (Exchange theory)

இது முதுமையாதலில் தனியன்களுக்கிடையிலான இடை வினைகளை முன்னிலைப்படுத்தி ஆய்வு செய்யும் நுண்ணிலைக் கோட்பாடாகும். மற்றவர்களுடன் தங்கள் ஆர்வங்களைப் பரி மாறிக்கொள்கின்றபோது சமநிலையில் சிறு தளம்பலை அடை யாளம் காண இது பிரயோகிக் கப்படும். குறிப்பாக முதுமையாதல் அனுபவங்களினூடாக பாதுகாப்பை வழங்குதல்

ஆதரவு வலைப்பின்னல்

குடும்ப உறவு மாற்றம் என்பவற்றில் இதனை செயற்படுத்திப் பார்க்கமுடியும்.

**நவீனத்துவக் கோட்பாடு** (Modernization theory)

இக்கோட்பாடு ஒரு சமூகக்குழு அல்லது ஒரு சமூக அமைப்பு கண்டுவரும் மாற்றங்கள் எவ்வகை யான நவீனத்துவ கூறுகளை உள்வாங்கி இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்கிறது. இது ஒரு தனியனின் அல்லது சமூகக் குழுவின் அந்தஸ்தினை தீர்மானிப்ப தாக அமையும். ஒரு முதிய நபர் இவ்வகையான நவீனத்துவ அம்சங்களை எவ்வகையில் எதிர் கொள்ளுகிறார் என்பதை கவனத்தில் கொண்டு அவரது இருப்புத் தொடர்பான சூழமைவு கணிக்கப்படுகிறது. இது பெரிய அளவிலான சமூக நிறுவனங் களையும், அவற்றின் சமூக மாற்றங்களையும், ஒரு முதிய மனிதனின் இருப்பு நிலை பற்றி உசாவுகின்ற பருநிலை கோட்பாடாகும்.

**தொடர்பறு கோட்பாடு** (Disengagement theory)

இது முறைசார்ந்த நேரடியான சமூகக்கோட்பாடு, அதேநேரத் தில் விசேடமாக முதுமையாதல் தொடர்பாக பார்க்கப்படக்கூடிய பருநிலைக்கோட்பாடாகும். முதியவர்கள் குடும்பக்கட்டமைப்பு, உறவு நிலை, சமூக நிலை என்பவற்றிலிருந்து விடுபட்டு போய் தனித்துவிடுகின்ற நிலையை இதனூடாக அணுகமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### முரண்பாட்டுக் கோட்பாடுகள்

Karl Marx இன் சிந்தனையை அடிப்படையாகக்கொண்டு எப்படி முதியவர்கள் சுரண்டப்படுகிறவர்கள் என்பதை குடும்ப நிலையில் மற்றும் சமூக அமைப்பு நிலையிலிருந்து அணுகமுடியும். அதேநேரத்தில் அந்நியமாதல் கோட்பாட்டினையும் இங்கு பரீட்சிக்கலாம். சமூகத்திலிருந்து, உறவு வலைப்பின்னலிருந்து அந்நியமாகும் வடிவத்தினை இங்கு காணலாம். இதனால் ஏற்படும் உளவியல் சார் பிரச்சனைகள். தற்கொலைகள் என்பன நுண்நிலை வடிவத்தில் ஆராய்வதற்கு முரண்பாட்டுக் கோட்பாடுகள் பொருத்தமானவை.

## சமூக நிறுவனங்களும் சமூக மாற்றங்களும்

### கட்டமைப்புத் தேக்கம்

கட்டமைப்புத் தேக்கம் என்பது சமூக வகிபங்கு, சமூக நியமம், சமூக நிறுவனங்களின் சமூக கட்டமைப்புக்கான மாற்றங் களை அவர்கள் வாழ்வில் தாமதப்படுத்துவதாக அமையும்.




இங்கு வகுக்கப்பட வயதினடிப்படையில் வருகின்ற இளமையில் கல்வி நடுவயதில் வேலை முதுமையில் ஓய்வு எனும் வகைப்பாடு கட்டமைப்பில் தேக்கத்தை கொண்டுவருவதில்லை. சமூக வகிபங்கு, நியமம், சமூக நிறுவனங்களின் இயக்கம், மாற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன சீரான நிலையில் இருக்கும். ஆனால் இணைக்கப்பட்ட வயதில் இளமை, நடுவயது, முதுமையில் கல்வி, அதேபோல் மூன்று பருவத்திலும் வேலை, மூன்று பருவத்திலும் ஓய்வு என்பது கட்டமைப்புத் தேக்கத்தை கொண்டுவரும் மாற்றங்கள் நிகழ்வதற்கான சாத்தியத்தை குறைத்து வகிபங்கு, நியமம், சமூக நிறுவனங்கள் என்பவற்றில் குலைவை ஏற்படுத்தும்.

**சமூக நிறுவனங்களும் முதுமையும்**

இங்கு சமூக நிறுவனங்கள் தலைமுறைகளுக்கான என்ன அர்த்தங்களை பகிர்கின்றன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஒரு குடும்ப வடிவத்துள் மைய நியமங்கள் (Core norms), குடும்ப உறவுகளின் எதிர்பார்ப்புகள் என்பன முதுமையை வரைகின்றன. தங்கியிருத்தல் மற்றும் சுயாதீனமான தன்மை என்பன இங்கு கவனத்திற்குரியது.

இங்கு குடும்பம் எனும் சமூக நிறுவனத்தினை ஒரு எடுத்துக்காட்டாகக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.




முதுமையாதலின் சமூகவியலில் முதியவர்களுக்கான சமூக உறுதிப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன.

1. குடும்ப வலைப்பின்னலுடனான இருப்பை உறுதிப்படுத்தல்.
2. கலை, விளையாட்டு சார் செயற்பாடுகள்
   நடனமாடல், நடத்தல், நீந்துதல் போன்றன.
3. சமூகச் செயற்பாடுகள்.
   இசைநிகழ்ச்சி, பிறந்தநாள் விழா, காலை உணவு
4. உணர்வுசார் செயற்பாடுகள்
   பாடல், இசை, சிறுவர்
5. அறிவுசார் செயற்பாடு
   கதை சொல்லல், புதிர், வாசகர் வட்டம், இரசனை
6. ஆன்மீகச் செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துவம்

இனத்துவம் என்பது ஒரு சித்தாந்தமாக, ஒரு நம்பிக்கையாக அல்லது ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணமாக கருதப்பட்டு வருகிறது.

ஒரு சமூகத்தின் அல்லது தேசத்தின் மேலானவர் என்ற அடுக்கிலுள்ளவர் மற்றவர்களிலிருந்து தன்னை வேறுபடுத்து வதற்கான அளவீடாக இனத்துவத்தை பயன்படுத்துகின்றனர். 19ம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் இனத்துவச் சிந்தனை ஆரம்பித்ததாக சொல்லப்படுகிறது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகளில் சமூக அரசியல் முக்கியத்துவங்கள் தருகின்ற அர்த்தங்கள் அதிகம் கவனப்படுத்தப் பட்டன.

வரலாற்றுப் படிமுறைகள் இனத்துவம் என்பவை பரம் பரையாக தலைமுறையால் அளிக்கப்படும் ஒரு விடயமாக காணுகின்றனர். தங்களிலிருந்து மற்றவர்களை குறைந்த உயிரினமயாக நிறம் மற்றும் பூகோள அடிப்படையில் தீர்மானித் தனர்.

**சமூகக் கோட்பாடு**

1920இல் உளவியலாளர்கள் இனத்துவப் பாரபட்சம் என்பது மரபார்ந்த கூறுகளாலானவை அல்ல எனவும் சமூகமய மாக்கலில் நடத்தைகளால் கற்கப்பட்டவை என்பதற்கான சான்றுகளை தொகுக்க ஆரம்பித்தார்கள்.

ஒவ்வொரு சமூகமும் தங்களுடைய பண்பாட்டுடன் தங்கள் பண்பாட்டு வழுக்களையும் தக்கவைத்துள்ளன. எனவே தொடர் சமூகமயமாக்கலில் இந்த இனத்துவ பாரபட்சம் அடுத்த தலைமுறை யினருக்கு நடத்தைகளாகக் கற்பிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இனமையவாதம் (Ethnocentrism)**

தங்களுடைய இனத்துவ அடையாளங்களை உயர்வாக கருதுகின்ற ஒரு கொள்கை வடிவம் இதுவாகும். தங்களது தரத்தையும் மதிப்பையும் கொண்டு மற்றைய இனக்குழுக்களை ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் தன்மை இங்கு காணப்படும்.

தனியன்கள் தங்கள் சொந்த சமூகத்தின் வகுப்புகளுக்கு குறைந்த ஆதரவு கொடுத்துச் செயற்படுகின்ற தன்மை எடுத்துக் காட்டாக இதற்குரியது.

தொழில்நுட்பத்தில் ஐரோப்பியர் தங்களை உயர்வானவர் களாக கருதுகின்ற நிலை காணப்படுகிறது. புவியியல், அரசியல் சூழல்களே ஒரு சமூகத்தை இன உயர்வு நிலைக்கு இட்டுச் செல்கிறது.

**இனத்துவ பெரும்பான்மை:**

இனத்துவ பெரும்பான்மை என்பது தொகை மதிப்பீட்டில் அதிகமாக உள்ள சமூகக்குழுக்கள் சிறுபான்மை குழுக்களை தவிர்த்து/ பாரபட்சப்படுத்துகின்ற, நிலையாக கொள்ளமுடியும் ஜப்பானியர்கள் "புராருமின்" எனும் இனக்குழுவினருடான தொடர்பை தவிர்த்து வருதலும், இலங்கையில் காணப்படும் பெரும்பான்மை சிறுபன்மை அரசியல் பிணக்குகளும் இதற்கான எடுத்துக்காட்டுகளாக கொள்ளமுடியும்.

**பெரும்பான்மை - சிறுபான்மை உறவுகளை விளங்கிக் கொள்ளல்.**

இதனைப்புரிந்து கொள்ள "முற்சாய்வு" எனும் எண்ணக் கருவை விளங்குதல் அவசியமானது.

இந்த முற்சாய்வு (Prejudice) இரண்டாம் உலகப்போர் காலத்தில் அதிகரித்தது. ஆறு மில்லியன் யூத மக்களின் இனப்படுகொலைக்கு பின்னாக செயற்பட்டது இந்த "முற்சாய்வு" எண்ணமே. Prejudice என்பது prejudgment எனும் ஆங்கிலப் பதத்துடன் தொடர்புடையது. முற்சாய்வு நான்கு மட்டங்களில் செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வார்த்தை வெளிப்பாடு
உ-ம்: "எனக்கு கருப்பர்களை பிடிக்காது"
"தமிழனை இக்குழுவுடன் இணைக்கக்கூடாது"
2. முற்சாய்வு நபர் தான் விரும்பாத குழுவின் அங்கத்தவர்களை தவிர்த்துக் கொள்ளுவார்.
3. பாரபட்சமாக நடத்துவார்.
4. உடல் ரீதியாக தாக்குவார்.

இதன் இறுதிவடிவம் "இனப்படுகொலை" (Genocide) ஆக காணப்படும்.

**இனமுரண்பாட்டை பகுப்பாய்வு செய்தல்.**

இதற்கான இரண்டு அணுகுமுறைகளை சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

1. முந்தை வாதம் (Primodialism)
இனத்துவம் என்பது நடத்தைசார் இயல்பாக பார்க்கப்படு கிறது. உயிரியல் ரீதியான அம்சங்களை கொண்டுள்ள இன முரண்பாடு பரம்பரை பரம்பரையாக பார்க்கப்படுகின்றது என இந்த அணுகுமுறையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. பரிசோதனை யாளர் அணுகுமுறை (Instrumentalist's approach)
இனத்துவம் நெகிழ்ச்சி தன்மைகொண்ட ஒரு வடிவம் சமூகக் கட்டமைப்பு எவ்வகையான நிபந்தனைகளைக் கொண்டுள் ளதோ அதற்கேற்ப செயற்படுகிறது. இனத்துவ அடையாளம் என்பது வளரலாம் அல்லது தேய்ந்து போகலாம் என்பது இவர்களின் கருத்துநிலையாகும்.

கட்டமைப்பு வாதிகளின் கருத்துப்படி இனத்துவ அடையாளம் என்பது சமூகத்தால் கட்டமைக்கப்படுவது. அதிகாரத்தை தேடுகின்ற உயர் சமூகத்தினால் வரலாற்றடிப்படையில் அவர்கள் கண்டுகொண்ட சமூக பொருளாதார நிலைகளைப் பேணுவதாகும்.

Donald Horowitz தனது Ethnic groups in Conflict எனும் நூலில் உளவியல் பண்பாட்டு அணுகுமுறையில் இனத்துவம் பற்றி பின்வரும் 4 வகை அம்சங்களை சுட்டிக்காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. துண்டப்பட்டது (Fragmented)

துண்டப்பட்ட ஒரு சமூகத்தில் நான்கு, நான்கிற்கு மேற்பட்ட இனக்குழுக்கள் இருக்கும். ஆனால் அவை ஒன்றை ஒன்று மேலாதிக்கம் செலுத்துவதில்லை.

உ-ம் : Nigeria

2. சமநிலைப்பட்டது (Balanced)

இங்கு நான்கு நான்கிற்கும் குறைவான இனக்குழுக்கள் இருக்கும் இவை எப்போதும் துருவங்களாகவே காணப்படும்.

உ ம்: வட அயர்லாந்து நாடுகள்

3. சிறுபான்மை மேலாதிக்கம் (Dominant Minority)

இரண்டு இனக்குழுக்களுக்குள் சிறுபான்மைக் குழுவின் ஆதிக்கமே மேலோங்கியதாக இருக்கும்.

4. பெரும்பான்மை மேலாதிக்கம் (Dominant Majority)


இரண்டு இனக்குழுக்களுக்குள் பெரும்பான்மைக்குழுவின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படும்.

உ ம்: இஸ்ரேல், இலங்கை

**பெரும்பான்மைப் பண்பாட்டுடன் சிறுபான்மையினரின் தொடர்பு**

மேலாதிக்கக் குழுக்கள் எப்பொழுதும் சமூக வளங்களின் மீதான கட்டுப்படுத்தும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கும்.

சிறுபான்மைக் குழுவின் அந்தஸ்து கட்புலனாகக் கூடிய பண்புகளை, வேறுபடும் நடத்துகைகள், சுய படிமங்கள், பகிரப்பட்ட அடையாளங்களை கொண்டிருக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனியாதல்** (Segregation)

சிறுபான்மையினர் தனிநபர்களாக, சிறுகுழுக்களாகப் பிரிந் திருத்தல். இது விரும்பித் தன்னார்வ நிலையில் நிகழ்கிறது.

பண்பாட்டுத் தனித்துவத்தை பேணுதல் என்பது இங்கு காரணமாகக் கொள்ளப்படுகிறது. எனினும் பிற சமூகங்களுடனான வெளிப் படையான முரணும் இதற்கான பிரதான பாத்திரத்தைக் வகிக்கிறது. இரண்டு வயைில் இதனைப் பார்க்கலாம்,

1. உண்மை, யதார்த்தத்தினடிப்படையில் நிகழ்வது (de facto)
2. சட்டத்தின் உதவியுடன் நிகழ்வது (de jure)

**சகித்துக்கொள்ளல்** (Accommodation)

இங்கு சிறுபான்மையினர் ஆதிக்கத்தின் கீழ் வாழும் குழுவினர் (Subordinate Groups) பகைமையை வெளியில் காண்பிக்காது இருப்பார்கள். சிறுபான்மை அங்கத்தவர்கள் ஆதிக்கப்பண்பாட்டு நியம விழுமியங்களை உணர்ந்துகொள்ள ஆரம்பிப்பார்கள். இங்கு இயங்குவதற்கு எல்லைப்படுத்தப்பட்ட சுதந்திரம் காணப்படும். தனியான பாடசாலை முறைமை, போக்குவரத்து, பொது நம்பிக்கைகள் காணப்படும்.

**பண்பாடேற்றல்** (Acealtration)

பண்பாட்டு ஒருமையாக்கம் இங்கு நிகழ்கிறது. பெரும் பான்மைச் சமூகத்தின் நியமங்கள், விழுமியங்கள் மற்றும் நடத்தைக் கோலங்களை தங்களுக்குச் சொந்தமானவையாக ஏற்றுக்கொள்ளும் நிலையே இது. ஆனால் மிக நெருக்கமான குழுவியல்புகளில் இணைந்திருக்கமாட்டார்கள்.

**ஓரினமாதல்** (Assimilation)

ஆதிக்கம் மிக்க குழுவும் ஆதிக்கம் குறைந்த குழுவும் இணைந்து ஓரினமாதலுக்கான அடிப்படைகளை கொண்டிருப்பார்கள், குறிப்பாக ஆதிக்கம் குறைந்த குழுவினர் பிரதான சமூக நிறுவனங்களையும் அதிக தனிப்பட்ட குழுவியல்புகளோடு ஏற்றுக்கொண்டு இணைந்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்றாய் கலத்தல் (Amalgamation)**

கலப்புத் திருமணம் மூலம் உடல் வடிவ வேறுபாடுளைத் துறந்து சிறுபாண்மையினரும் ஆதிக்கக்குழுவினரும் ஒன்றாகும் தன்மையே இது.

இனத்துவம் என்பது வேறுபாட்டடிப்படையில் சமூக விவகாரமாக மாற்றம் அடைகிறபொழுது அது தொடர்பான ஆய்வுகள் அவசியமாகின்றன. ஏனெனில் சமூகக் குழுக்களின் சுமூகமான இருப்பு என்பது எப்பொழுதும் உறுதிப்படுத்தப் படவேண்டியதாகும். அதற்காக சமூக ஆய்வாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், மானிடவியல் ஆய்வாளர்கள், சாத்தியமான அம்சங்களை முன்மொழிவதற்கான தேவை முன்னிற்கிறது.

உ-ம்: ஆங்கிலோ இந்தியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை மீறும் மது

மது பாவிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது அதனை மிக முக்கியமான சமூகப் பிரச்சினையாக இனங்கண்டு கொள்ள முடிகிறது.

எனினும் உலகின் பல கலாச்சாரங்களிலும் காணப்படுகின்ற இந்த குடி என்கிற செயல் ஒரு சமூக நடவடிக்கையாக பண்பாட்டு நடவடிக் கையாக இருந்து வந்துள்ளது. இன்னொரு வகையில் இது அரசின் வருமானமாகவும், ஒற்றறிவதற்கான தொழிநுட்பமாகவும், இருந்து வந்துள்ளது. இப்பொழுதும் கூட இப்பண்பாடு மேற்றிசை நாடுகளில் இருந்து வருவதை காணலாம். இந்தியாவிலும், இலங்கையிலும் இப்பண்பாடு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைமுறையில் இருக்கிறது. குடி என்பதில் சிறுபான்மையாகக் காணப்படுகின்ற மிகைக்குடி என்கிற செயல் ஏற்படுத்துகின்ற சீரழிவுகளும், சமூக ஒழுங்குக் குலைவுகளும், ஒட்டுமொத்தமாக குடி எனும் கலாசாரத்திற்கு எதிர்வாதமாக முன்வைக்கப்படுகின்றது. இப்பொழுது குடிப்பது என்பது அறம்சார்ந்த பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது. சமூக ஒழுங்கை காப்பதற்கு குடியை கட்டுப்படுத்தும் நிலையை அரச அதிகாரம் கையிலெடுக்கிறது. எனவே குடி கலாசாரம் ஒரு சமூக நடைவடிக்கையாக இருப்பதோடு சமூகத்திற்கு எதிரான சம்சங்களை கொண்டிருப்பதாகவும், பார்க்கப்படுகிறது.

18ஆம் நூற்றாண்டில் ஆரம்பம் முதல் குடியின் பண்பாக மிகைக்குடி குறித்த எதிர்மறையான அணுகுமுறை நிலவி வந்ததாக ஹான்சன் என்பவர் குறிப்பிடுகிறார். மிகைக்குடி என்பது பொதுவாக சுயத்தை இழப்பதாகவும், ஆன்மீக விடுதலைக்கும், சமூக ஒழுங்கமைப்பிற்கும், எதிரானதாக பார்க்கப்பட்டது. போதை மனிதன் தன் சுயத்தின் அறிவை இழப்பதாக கருதப்பட்டது. இருந்தபோதிலும், அல்கஹோல் நுகர்ச்சி ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இது சமூக ஒழுங்கமைப்பிற்கு எதிராக தனித மனித சுயம் கண்டடைந்த ஒரு வகை விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாக செயற்படுவதை அடையாளம் காண்கிறார்கள். பிராவ்டல் என்கிற ஆய்வாளர் கூறுவது போல அல்கஹோலை 16ஆம் நூற்றாண்டு உற்பத்தி செய்தது. 17ஆம் நூற்றாண்டு பலப்படுத்தியது, 18ஆம் நூற்றாண்டு பரவலாக்கியது.

19ஆம் நூற்றாண்டில் தொழில் மயமாக்கல் வளர்ச்சியால் மனித உழைப்பு உழைப்பு சக்தியாகவும், ஒரு பண்டமாகவும் மாற்றப்பட்டதால், மது குறித்த கருத்தாக்கங்கள் பெரும் மாற்றங்களைக் கண்டது. நிலையான, நம்பத்தகுந்த, நேரம் தவறாத தொழிலாளிகளின் தேவை அதிகரித்ததை ஒட்டி மது அருந்துதலை குறித்த அரசின் அல்லது அதிகாரத்தின் கவனம் அதிகரிக்கத் தொடங்கியது. உழைப்பிற்கான உடல்களை ஒழுங்கமைப்பதற்காக உடல் குறித்த மருத்துவ மற்றும் உடல் அறிவியல் ஆய்வுகள் அதிகமாக்கப்பட்டன. மதுவும் மிகைக்குடியும், பாவம் என்கிற மதம் சார்ந்த கண்ணோட்டத்திலிருந்து ஆரோக்கியம் சார்ந்த முதலாளித்துவ நலன் நோக்கிய வாழ்வு மறுகட்டமைப்புச் செய்யப்பட்டது.

தொழில் சமூகத்துடன் உறவுகொண்ட நகர்மயமாதல் என்பதால் ஏற்படும் பக்கவிளைவுகளான குற்றங்கள், வறுமை, குழந்தைகளின் இறப்பு வீதம் போன்றவை மதுக் குடியின் விளைவாக காட்டப்பட்டன என்கிறார் ஹான்சன்.

மதுவை கட்டுப்படுத்தும் திட்டம் என்பது அரசு நடவடிக்கையாக இருந்தபோதிலும் அது ஒரு வருமானம் தரும் முக்கியமான களமாகவும், அதே நேரத்தில் முதலாளித்துவத்தின் அம்சங்களைக் கண்டு கொள்ளாத அளவில் மக்களை மனம் மயக்குகின்ற ஒன்றாகவும் பார்க்கப்படுகின்றது. இங்கு குடியை முறைப்படுத்துவது என்பது அரசின் அல்லது சமூக ஒழுங்குகளின் நோக்கமல்ல. குடியால் தினசரி வாழ்வும், சமூக ஒழுங்கும், சீர்குலைந்து விடும் என்கிற அச்சமே முன்னிற்கிறது.

இவ்வகையான முற்புரிதலோடு எல்லை மீறுகின்ற மது தொடர்பான சில குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தரப்படுகின்ற சிறு புள்ளிவிபரம் மதுபாவனையின் செறிவை குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பாவனையை சுட்டுகிறது. யாழ் மதுவரித் திணைக்களத்தினால் 64 மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| மதுவரித் திணைக்களம் | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|
| யாழ் நகர் | 27 |
| பருத்தித்துறை | 14 |
| மல்லாகம் | 10 |
| சங்கானை | 07 |
| சாவகச்சேரி | 06 |

இது, குறித்த பிரதேச மதுவரி திணைக்களத்திற்குட்பட்ட விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையாகும். ஆனால் அனுமதி பெறப்படாத விற்பனை நிலையங்கள் பலவும் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றன.

யாழ் நகருக்கான மதுவரி நிலையத்தினால் யாழ் நகர்ப்பகுதியில் (27 நிலையங்களால்) விற்பனை செய்யப்பட்ட ஒரு ஆண்டுக்கான மதுவின் அளவு,

| | |
|---|---|
| செறிவு குறைந்த மதுபானம் | 1337 000 லீற்றர் |
| செறிவு கூடிய சாராயம் | 4781 153 லீற்றர் |
| கள் | 1296 000 லீற்றர் |

மதுபாவனையை விளங்கிக் கொள்ளுவதற்குரிய குறுக்கு வெட்டு முகமாக இது அமையும். உண்மையில் மதுபாவனை என்பது எங்கள் சமூக நடத்தை மற்றும் விழுமியங்களின் பிரதிபலிப்பாகவே அமையும். ஒரு தனிமனிதனின் சமூக இருப்பு, உளவியல் சூழமைவு அவனது மதுபாவனைக்கான தூண்டியாக அமைந்திருப்பதை சமூகவியல் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மது இன்று எந்த இளையோரும் பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருப்பது சட்ட ரீதியான நிலையிலும் பொதுவான நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சமூக அமைப்புக்குள் பெரும்பாலும் "மதுபாவனை" என்பது ஒதுக்கி வைக்கப்பட்ட நடத்தையாகவே இருக்கின்ற போதும் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுக்குழுக்களுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாக (பழங்குடியின மக்களிடம் இப்பொழுதும் அவதானிக்கலாம்) காணப்படுகிறது.

நாகரிகமடைந்த அல்லது தங்களை மேல் நிலையினராக கருதும் சமூகக் குழுக்கள் மதுபாவனை வெளிச்சாதிக் குழுவுக்குரியது. (Out Caste group) என முத்திரையிடுகின்ற சமூக வழமை இருக்கிறது. குறிப்பாக சாதியில் குறைந்தவர்கள் என கருதப்படுபவர்கள், குற்றவாளிகள், பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள், பட்டிக்காட்டு மக்கள் போன்றோரே மதுபாவிப்பவர்கள் எனும் கருத்துநிலை எல்லைப்படுத்தப்பட்ட சிந்தனையுடனுள்ள மேல் சாதியினர் தூய்மை மக்கள் என எண்ணுபவர்களின் சிந்தனையாகும். குற்றம், வன்முறை மற்றும் ஏனைய சமூகவிலகல் சார் நடத்தைகள் இவர்களாலேயே நிகழ்த்தப்படுகிறது என்ற பொதுக்கருத்து நிலையையும் சமூகத்தில் ஊன்றியிருக்கிறார்கள்.

ஒரு தனியன் தனது சமூக முறைமையின் செல்வாக்குட்பட்டு மதுவை நாடுகிறான். பின்வரும் சில குறிகாட்டிகள் இதனை அடையாளப்படுத்தும்.

- வேலையிழப்பு
- குடும்பம் சிதைந்து போதல்
- சமூக ஒழுங்கீனம்

மதுபாவனையின் அடிப்படையிலான பிரச்சினைகளை புரிந்து, கொள்வதற்கு விலகல் நடத்தை மற்றும் விழுமிய முரண்பாடு அணுகுமுறைகள் பயனுள்ளவையாக அமையும்.

**மதுபாவனையில் இரண்டு அடிப்படைகளை இனங்காண முடியும்.**

1. சமூகப்பாவனை

   இது ஒரு தனியன் தனது அந்தஸ்தை நிலைநாட்ட அல்லது ஒரு குறித்த இடத்தில் குறித்த குழுவினை நாகரீகமாக திருப்திப்படுத்த மதுவைப் பாவிப்பதாக கொள்ளலாம்.

   இதன்போது தனியன் மட்டும் பாதிப்புக்குள்ளாவதற்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. ஆனாலும் மதுபாவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது சமூகத்தில் தாக்கத்தையேற்படுத்தும் ஒரு நடத்தை யாகவே கொள்ளப்படுகிறது.

2. பிரச்சினையான பாவனை

குடித்தலின் அளவு அதிகரிக்கின்றபோது அங்கு துஷ்பிரயோகப்படுத்தலுக்கான சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. இதனால் தனியன் தன்னுடன் சமூகத்தையும் பிரச்சினைக் குள்ளாக்குவான்.

**பிரச்சினைக்குள்ளாக்கும் மதுபாவனையின் குறிகாட்டிகள்**

1. அதிகளவான மது நுகரப்படும்.
2. தங்களுடைய சுய கட்டுப்பாட்டினை இழந்து உடலியல் நிலையில் மற்றவரில் தங்கியிருத்தல்.
3. மன அழுத்தத்தைக் குறைக்கும் பொருட்டு உளவியல் ரீதியில் இன்னொருவரின் ஆதரவை எதிர்பார்த்தல் தங்கியிருத்தல்.
4. தன்னைச் சூழவுள்ள நண்பர்கள் - அயலவர்கள் - குடும்பத் தினருடன் பிரச்சினை செய்தல்.
5. தனது வேலைத்தளத்தில் பிரச்சினை
6. விபத்தில் சிக்குதல்.
7. உடல் ஆரோக்கியம் கெட்டுப்போதல்
8. குறித்த நபருடைய பொருளாதார நிலைமை மோசமடைதல்.

சமூகவியலாளர்கள் மதுபாவனை தொடர்பாக மூன்று நிலைகளிலான விளக்கங்களைத் தருகிறார்கள்.

1. உடலியல் விளக்கம் (Physiological Explanation)
2. உளவியல் விளக்கம் (Psychological Explanation)
3. சமூகவியல் விளக்கம் (Sociological Explanation)

**உடலியல் விளக்கம்**

மதுபாவித்தலுக்கான தூண்டுதல் ஒரு தனியனுக்கு அவனது பரம்பரையியலின் அடிப்படையிலிருந்து கிடைக்கிறது என்று கூறும் இந்த உடலியல் விளக்கம், தனியனின் உயிரியல் ரீதியான அம்சங்கள் இதன் பின்னணியிலுள்ளன என்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஒரு தனியனிடமுள்ள ஆரோக்கிக் குறைபாடு, ஓமோன்களின் சமனற்ற தன்மை என்பன இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன.

மதுபாவனையை ஒரு நோயாக பார்க்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**உளவியல் விளக்கம்**

மதுவிற்கடிமையானவர்களின் மனம் நோய்ப்பட்டதாகவும், ஒழுங்கீனம் கொண்டதாகவும் இருக்குமென சொல்லப்படுகிறது. இங்கு E. M. Jellineck இன் கருத்துக்கள் முக்கியமானவை தனியனின் ஆளுமை ஒழுங்கமைவின்மை அவனை உளவியல் ரீதியாக மதுவிற்கு அடிமையாகச் செய்யும்.

மிகை மதுபாவனை என்பது தனியன்களின் இயல்பான உணர்வுகளை திசைதிருப்பி விலகல் நடத்தைகளுக்கு இட்டுச் செய்வதாக அமையும்.

உ+ம்: ஓரினச் சேர்க்கை

மேலும் தற்கொலையில், சமூக வாழ்வில் விருப்பமில்லாத வர்கள் தங்களையே அழித்துக்கொள்வதற்காக மதுவை பயன் படுத்துகின்றனர் என ஒரு விளக்கமும் தரப்படுகிறது. எவ்வா றெனிலும் இவர்களின் உளவியல் தன்மை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாகவேயிருக்குமென உளவியலாளர்கள் கூறுகின்ற னர்.

1. ஒத்திசைவற்றிருத்தல்
2. முதிர்வற்ற தன்மை
3. தங்கியிருத்தல்
4. தங்களைப் பற்றிய எதிர்மறையான உணர்வு
5. குற்றவுணர்வு
6. பதட்டம், விரக்தி, பதகளிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வகையான ஒரு விளக்கம்,

மதுவுக்கு அடிமையாதல் கற்கையின் தொடர்ச்சியாக அமைந்து விடுகிறது என்கிறது. அதாவது வலி, துன்பத்திலிருந்து விடுபட்டு இன்பம் காண்பதற்காக குடிப்பவர்கள், அது கிடைப்பதாக உணர்வேற்றப்பட்டு மீண்டும் மீண்டும் குடிப்பார்கள்.

**சமூகவியல் விளக்கம்**

மதுபாவனைக்கான சமூகவியல் விளக்கம் என்பது பண்பாட்டுக் காரணிகளின் அடிப்படையில் புரிந்து கொள்ளப்படுகிறது. மதுபாவனை ஒவ்வொரு சமூகக் குழுவிடமும் அல்லது ஒவ்வொரு பண்பாட்டுக்குழுவிடமும் வெவ்வேறு மட்டங்களிலான அர்த்தங்களை பெற்றுக் கொள்கிறது.

பொதுவான தளத்தில் விலகல் நடத்தையாக கருதப்படும் மதுபாவனை சுட்டிக்காட்டும் அணுகுமுறையால் எதிர்கொள்ளப் படுகிறது.

உ+ம்: குடிகாரன் எனும் பதம் சமூக மட்டங்களில் உலவுவதை அவதானிக்கலாம்.

இத்தகைய அடையாளப்படுத்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்,

- பாவனையின் அளவு
- பாவனையின் தொடர்ச்சி
- தனியனில் விளைவு
- மற்றவர்களின் பிரதிபலிப்பு
- கையாளும் முறை (வேலை நேரத்தில், சீருடைகளுடன்)
- பாவிப்பவரின் சமூக வகுப்பு
- பாவிப்பவரின் நடத்தையில் மற்றவரின் செல்வாக்கு

இங்கு தனிப்பட்ட அல்லது குடும்ப உறவுகளில் பிரச்சினை ஏற்படுகிறது. மகிழ்ச்சியற்ற திருமண வாழ்க்கையும் இயல்பற்ற வீட்டு நிலையும் குடும்பத்தை செழிப்பற்றே வைத்திருக்கும். பிள்ளைகள் குடிக்கும் தந்தைமீது இயல்பான பாசத்தினை கொண்டிருக்க மாட்டார்கள். குறிப்பாக, மதுபாவனையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட குடும்பத்துப்பிள்ளைகள் தங்களது உணர்வுத் தேவை பூர்த்தியாக்கப்படாதவர்களாக, குடும்ப வலைப்பின்னல் குலைந்து தங்களது சிறு பிராயத்தை தொலைத்தவர்களாக இருக்கும் சூழல் தோற்றுவிக்கப்படுகிறது.

மதுபாவனைக்கு அடிமையானவர்களின் தனிப்பட்ட ஆரோக்கியம் கெட்டுப்போகிறது. நோய், இறப்பு விரைவில் வந்து விடுகிறது. மது தொடர்ச்சியாக பாவிப்பவர்கள் எதிர்பார்க்கை வாழ்வுக்காலம் குறைந்து 20 வருடங்களுக்கு முன்னதாகவே இறந்துவிடுகிறார்கள் என புள்ளிவிபரக் கணிப்புகள் சொல்கின்றன. இவர்களுக்கு புற்றுநோய், ஈரல் பிரச்சினைகள், கடுமையான இதய வருத்தங்கள் ஏற்படுகின்றன.

சாதாரணமாக இயங்குவதற்கான இயல்பு கெட்டுப் போகிறது. மூளை பாதிப்படைவதற்கான சாத்தியங்கள் தோற்று விக்கப்படுகின்றன. செல்களின் எண்ணிக்கை குறை வடைந்து ஞாபகமிழப்பு ஏற்படுகிறது. உளவியல் தாக்கம் அதிகரித்து விடுகிறது.

அதிகமான பெருவிபத்துக்களை ஏற்படுத்துபவர்களாக மதுவுக்கு அடிமையானவர்களே இருக்கிறார்கள். இவர்கள் தற்கொலை செய்வதற்காக இப்படி வாகனங்களை பயன்படுத்து கிறார்கள் என்பதான கணிப்புமுண்டு.

குடிப்பவர்கள் எல்லோரும் குற்றச்செயல்களில் ஈடுபடுவ தில்லை எனினும் குற்றச் செயல்களுக்கான தூண்டியாக மது பாவனை செயற்படுகிறது. கொலைகளில் 50% உம் தற்கொலைகளில் 1/3 பங்கும் மதுபாவனையில் என்பது கணிப் புண்டு. இதை பாலியல் துன்புறுத்தல்கள், சொத்துக்கள் சேதமாக்கப்படல் போன்ற குற்றச்செயலின் பிரதான சூத்திரதாரியாக மதுபாவனை இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபாவனையிலிருந்து தனியனை விடுவித்தல்

### மருத்துவ சிகிச்சை

மருத்துவத்தின் மூலம் விடுவிக்க குறைந்தது 4/5 வருடங்கள் எடுக்கும். இதன்மூலம் விடுபடுபவர்களின் எண்ணிக்கை குறைவு. "மது" சமூக வகுப்போடு தொடர்புபட்டது.

சமூகத்தரத்திற்கு , பொருளாதார தரத்திற்கேற்ப அவர்களின் பாவனைப்பொருள் தரம், அளவு வேறுபடும். எனவே சமூக வகுப்பிற்கு ஏற்ப மருத்துவ மாதிரிகளை பயன்படுத்தும் வேறு படுநிலை காணப்படுகிறது. குறைவாக குடிப்பவர்கள் விரைவில் அதிலிருந்து மீட்கப்படுகின்றனர்.

### உடலியல் சார் சிகிச்சைமுறை

நீண்டகாலம் மதுவைப் பாவித்தவர் திடீரென நிறுத்துவது ஆபத்து. எனவே பாவனையின் அளவை குறைத்து வருவதன் மூலம் உடல் கண்டுவரும் மாற்றங்களை கவனத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கப்படும்.

அதிகம் பின்வாங்கும் தன்மை உடையவர்களாக இவர்கள் இருப்பார்கள் நரம்புத்தளர்ச்சி காணப்படும். இவர்களை சமநிலைப்படுத்தி ஓய்வு கொடுப்பது சிகிச்சையின் அடிப்படை ஆகும்.

### உளவியல் சிகிச்சைமுறை

மது பாவனைக்கு அடிமையானவர்களின் ஆளுமை ஒழுங்கமைவின்மையில் மாற்றத்தை ஏற்படுத்தும் தன்மையில மைந்தது இது. இங்கு குழுச்சிகிச்சை முறை, ஆன்மீகப் பயிற்சி , கலைப் பங்குபற்றல் என்பன மாற்றீட்டுச் செயற்பாடுகளால் முன்வைக்கப்படுகின்றன.

குழுச்சிகிச்சை மூலம், மற்றவர்களின் நிலையும், தங்களின் நிலையும் உணர்ந்து ஒரு தற்புரிதல் பெறுவர். இவர்களின் மனம் சமநிலையடைய இது உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனுடன் ஆன்மீக விடயங்கள், சமய பங்குபற்றல்கள், யோகா, தியானம் என்பனவும் இவர்களின் மனதை ஒரு நிலைப்படுத்தி "குடித்தல்" என்ற எண்ணத்திற்கு மாற்றீடாக அமையும்.

கலை வடிவங்களில், படைப்பு முயற்சிகளில் ஆர்வம் கொண்டவர்களை அதிலீடுபடுத்தி அவர்களின் நேரத்தையும் அவர்களது எண்ணங்களையும் வேறு நிலைப்படுத்துதல்.

**சமூகவியல் சிகிச்சை**

சமூக நிலைமைகள் குடிக்கத்தூண்டும் பிரதான காரணி களாக அமைகின்றன. Joel fort, Christopher, T.Corg ஆகியோரின் ஆய்வின்படி சமூக நிலைமைகளுக்கு கூடுதல் அழுத்தம் கொடுக்கும் அவர்களின் சாதி, வகுப்பு, சமமற்ற தன்மை என்பவற்றால் ஏற்படும் விரக்தி, திருப்தியின்மை காரணமாக குடிக்கிறார்கள்.

எனவே சமூக அமைப்புக்குள் நீதியற்ற தன்மைகளை களைந்து சமவாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது ஒரு அணுகுமுறையாக அமையும். கல்வி, வேலைவாய்ப்பு, சமூக பங்குபற்றல்கள் என்பவற்றை பொது நிலைப்படுத்தி ஆரோக்கிய மான கட்டமைப்பை உருவாக்குதல்.

அத்துடன் சுட்டி இனங்காட்டும் முறையால் ஒரு தனியன் குடிப்பதற்கு மீண்டும் தூண்டப்படுகிறான். மதுபாவனைக்கு அடிமையான ஒரு தனியன் சமூக ஒதுக்கலுக்கு உள்ளாக்கப்படு கிறான். அவனது விலகல் நடத்தையும் சமூக ஒழுக்கமைவின்மையும் சமூகத்திலிருந்து அவனை அந்நியப்படுத்திவிடுகிறது. இந்த அந்நியமாதல் நிலையால் சமூக வலைப்பின்னலிருந்து ஒதுக்கப் படும் வாய்ப்புக்களே அதிகரிக்கிறது. இதனால் அவனது குடும்பம் பாதிப்பிற்குள்ளாகிறது.

சமூகவியல் அணுகுமுறையில், குறித்த தனியனை ஒதுக்கிவிடாது சமூக ஆதரவளித்து அவனை இந்த நோய்க்கூறிலிருந்து விடுவித் தலுக்கான சமூகச் செயற்பாடு களை சமூக நிறுவனங்கள் மற்றும் சமூக கட்டுமானங் களினூடாக முன்னெடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்ற நடத்தை

**அறிமுகம்**

குற்ற இயல்புகள் நிறைந்த சமூகவெளிகளே அனைவருக்குமான இருப்பினை கட்டமைத்துக் கொள்கின்றன. அனைவருக்கும் "குற்றம்" என்பது தொடர்பான நெருங்கிய பரிச்சயமோ அறிமுகமோ அல்லது அது பற்றியதான எழுத்துக்களோ வார்த்தைகளோ உடனில்லாமல் போவதற்கான சாத்தியங்களே இல்லை. இன்றைய அச்சூடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் குற்றங்களை அதற்கான உயிர்ப்புடன் எம்முன் நிறுத்துகின்றன.

" இலண்டனிலிருந்து வந்த குடும்பத்திடம் ஐம்பது இலட்சம் ரூபா கப்பம் கோரல்"

"பெற்றெடுத்த தாயால் கைவிடப்பட்ட குழந்தை"

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்கள் வைத்திருந்த இளைஞன் பொலீசாரால் கைது"

"காதலியை மயக்கமடையச்செய்து பணம், நகைகளை அபகரித்த காதலன் கைது"

"மாணவியைக் கடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்"

"விபசார விடுதி சுற்றிவளைப்பு"

"பணயக் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டிருந்த எட்டு சுற்றுலாப் பயணிகளும் சுட்டுக்கொலை"

மேற்காட்டியவை குறித்த ஒரு நாளில் வெளியான நாளிதழில் சுட்டிக்காட்டக்கூடிய குற்றம் தொடர்பான செய்திகள். "எமில் துர்கைம்" கூறுவது இங்கு மிகப் பொருத்தமுடையது. ஒரு சமூகம் குற்றங்களற்று இருப்பதென்பது சாத்தியமற்றது. அனைத்து சமூக உறுப்பினர்களாலும் குறித்த சமூகத்தின் அனைத்து சமூக விதிகளையும் முழுமையாக கடைப்பிடிக்க முடியாது எனக்கூறும் துர்கைம், சிக்கலான அமைப்புப் பண்புகள் கொண்ட சமூகங்களின் ஒவ்வொரு நிறுவன வமைப்புக்களும் தனிமனிதனுடன் கொண்டுள்ள உறவுநிலையினடிப்படையில் இதனைப் புரிந்து கொள்ளமுடியும் என விளக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குற்றம்

இந்தப்பின்னணியில் குற்றம் என்பதனை கருத்தியல் அடிப்படையில் விளங்கிக்கொள்வதும் அதன் சமூகவியல் சார்ந்த சுருக்கமான அறிமுகத்தைப் பெறுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும். அந்தவகையில் குற்றம் என்பது,

"குறித்த குற்றத்தால் பயங்கரமானதும், பயமுறுத்தலுக் குள்ளாக்கப் படக்கூடியதும் கொடுமைப்படுத்தப்படக் கூடியதுமான நிலைகளை விளைவிப்பதாகும்"

ஒரு முதல்நிலைப் புரிந்துகொள்ளலாகக் கொள்ளமுடியும். இவ்வாறான குற்றங்கள் அடிப்படையில் இருவகைப்படுத்தப் படக்கூடியன.

1. வன்முறை சார் குற்றங்கள்
   குறிப்பாக இக்குற்றங்கள் மனித உடல், உயிர் பாதிப்பை விளைவிப்பன. கொலை, காயப்படுத்துதல் போன்றன.
2. தனிப்பட்ட சொத்துக்களுக்கெதிரான குற்றங்கள்
   வீடு சேதமாக்குதல், வாகனங்களை உடைத்தல் அல்லது எரித்தல் போன்ற குற்றங் கள்.

மரபார்ந்த அணுகுமுறையினூடாக குற்றங்கள் விலகல் நடத்தையின் வடிவங்களாகவே பார்க்கப்பட்டு வருகின்றன. அதாவது, விளையாட்டுக் குழுக்கள், தொழிலாளிகள், இளைஞர் குழுக்கள் எனக் குழுநிலைப்படுபவர்கள் தங்கள் குழுக்களுக்கான சில விதிமுறைகளைக் கொண்டவர்களாயிருப்பார்கள். இந்த அடிப்படையில் குழுசார் விலகல் நடத்தை, குறித்த குழு அங்கத்தவர்களில் உருவாவதற்கான சூழல் ஏற்படுவது இயல்பு. இதன் பின்னணியில் குற்றங்கள் பிறக்கின்றன. இதனை நாம் ஒவ்வொரு சமூகக் குழுக்களிடையேயும் பொருத்திப் பார்க்க முடியும்.

இது ஒரு சமூக நோயியல் நிலை அல்ல என துர்க்கைம் கூறுவதனை இச்சந்தர்ப்பத்தில் கவனப்படுத்திப் பார்க்க வேண்டியதும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குற்றவாளி**

சமூகவியல் நோக்கில் குற்றவாளியை மூன்று நிலைகளில் வைத்து விளங்கிக்கொள்ள முடியும்.

1. மதம் சார் நிலை

   மதங்கள் குற்றவாளி ஒருவனை பேய்/பிசாசு எனவும் தீய சக்தியால் பீடிக்கப்பட்டவன் எனவும் புரிந்துகொள்ளக்கூடிய சாத்தியத்தில் தத்தமது கருத்து நிலைகளை வெளிப் படுத்தியுள்ளன.

2. உயிரியல் சார் நிலை

   குற்றவாளி ஒருவனின் தலையினது அமைப்பின் அடிப்படையில் அவனை குற்றவாளி எனச் சொல்லமுடியும் எனக் கூறப்படுகிறது.

   (இவ்வாறான கருத்துநிலை 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் நிலவியது)


3. சமூகம்சார் நிலை

   குற்றம் எப்போதும் சமூகத்தின் தாழ்ந்த வகுப்பினர் எனக் கருதப்படுபவர்களாலேயே நிகழ்த்தப்படுகிறது என்பதாகும்.

குற்றவாளிகள் தொடர்பான சமூகவியல் கற்கைகளில் ஐந்து பிரதான குடியியல்சார் மாதிரிகள் முன்னிலைப்படுத்தப் படுகின்றன. இந்த மாதிரிகளின் இயல்பு நிலைகளுக்கேற்ப குற்றவாளிகளை அடையாளர்காணவும் வகைப்படுத்தவும் முடியும்.

1. பால்நிலை மாதிரி

   இது ஆண்கள் பெண்கள் என்ற வகைப்பாட்டு மாதிரியைக் கொண்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டிய முறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிடைக்கக்கூடிய வெவ்வேறுபட்ட பாரம்பரிய வாழ்க்கைமுறைப் பயில்வு, குடும்ப வாழ்க்கை முறைப் பயில்வு, சமூக வாழ்க்கை முறைப் பயில்வு, சூழமைவு வாழ்க்கை முறைப்பயில்வு என்பன அவர்களின் குற்றங்களை தீர் மானிப்பவையாக அமைகின்றன.

2. வயது நிலை மாதிரி

ஒவ்வொரு பருவத்தினருக்குமான குற்றங்கள் வேறுபடுகின்றன. ஆய்வுகளினடிப்படையில் வளரிளம் பருவத்தினரும் (Teenagers), வாலிப வயதினரும் (young adults) அதிகளவில் குற்றங்களோடு தொடர்புடையவர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். பொதுவாக சொத்துடைமை சேதப் படுத்தல், களவு, தகாத உறவு, பாலுறவுக் குற்றங்கள், வன்முறை போன்ற குற்றங்களில் அதிகளவு ஈடுபட்டுள்ளனர்.

3. இனத்துவ நிலை மாதிரி

இன வேறுபாட்டுணர்வு மேற்கிளம்புகின்ற நிலையில் குற்றங்கள் நிகழ்கின்றன.

தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பாகுபாட்டுணர்வில் இலங்கையில் நிகழுகின்ற நிகழ்ந்த குற்றங்களை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

4. சமூக வகுப்பு நிலை மாதிரி

ஒவ்வொரு சமூக வகுப்பினருக்கும் ஏற்றவகையில் அவர்களின் குற்றங்களினையும் வேறுபடுத்த முடியும். குறைவான சமூக பொருளாதாரப் பின்னணியைக் கொண்டவர்கள் அதிக குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் எனும் கணிப்பு உண்டு.

குறிப்பாக இளங்குற்றவாளிகள் தொடர்பில் இக்கூற்று உண்மையானது என ஆய்வுகள் சுட்டி நிற்கின்றன. இதேபோல் மேல்தட்டு வர்க்கத்தினரிடம் பெருங்கொள்ளை, கொலை, முரட்டுத்தனமாக பழிவாங்குதல் போன்ற குற்றங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

இதேபோல் நடுத்தரவ ர்க்கத்தினரிடம் அதிகளவான குற்றங்கள் குடும்பத்தினர் அயலவர், நண்பர்களுக்கிடையே ஏற்படும் வன்முறை சார்ந்தவையாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புவியியல் நிலை மாதிரி

புவிசார் அமைப்பு நிலையில் குற்றங்கள் வேறுபட்டும் குறித்த அடையாளங்காணப் படக்கூடியனவாகவும் காணப்படு கின்றன. கிராமப்புறங்களைவிட நகரங்கள் அதிகளவில் குற்றங்களை உற்பத்தி செய்வனவாகவும் பராமரிப்பனவாகவும் இருக்கின்றன. இதனை விட சேரி அமைவிடங்களில் காணப்படும் குற்றங்கள் அவர்களின் வறுமையுடன் தொடர்பு பட்டனவாய் உள்ளன.

இவ்வைந்து பிரதான மாதிரிகளையும் விட "சனத்தொகை" எனும் மாதிரியையும் இங்கு மேலதிகமாக குறித்துச்சொல்ல முடியும்.

குறிப்பாக பாரிய வர்த்தக மையங்களில் சன நெருக்கடிக்குள் குற்றங்கள் நிகழ்வதும் சொல்லத்தக்கது ஆலயச் சூழல்களில் நடக்கும் திருட்டுக்கள் மற்றும் குற்றங்கள் சன நெருக்கடிக்குள் நிகழும் குற்றங்களுக்கு தகுந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

**குற்ற நடத்தைக்கான மூலம்**

பொதுவாக குற்ற நடத்தையை வெளிப்படுத்தும் மூலகங் களில் பிரதானமானதாக சமூகக் கட்டமைப்பைக் குறிப்பிடலாம். சமூகக் குழுக்களுக்குள் அமைந்துவிடுகின்ற சமனற்ற வாய்ப்புக் களே குற்ற நடத்தையைத் தோற்றுவிப்பதால் அமைகிறது. இது ஒரு சமூக அமைப்புள்ளிருக்கும் ஒருமித்த வாழ்வனுபவங்களையும் பொது வாழ்வியல் வரலாற்றையும் தர முடியாத கட்டமைப்புள் தோற்றுவிக்கப்படுவதாகும்.

**குற்ற நடத்தையின் வகைகள்**

இங்கு குற்ற நடத்தையானது அதனுடன் தொடர்புபட்டவர்களை கவனத்திற்கொண்டு வகைப்படுத்தப்படுகிறது.

i. சிறுவர் குற்றம் (Juvenile crime)

இதனை பதினெட்டு வயதிற்கு குறைந்த சிறுவர்களோடு தொடர்புபட்ட குற்றம் எனலாம். இக்குற்றவாளிகளை கையாளுவதற்கு தனியான சிறுவர் நீதிமன்றங்கள் உண்டு. இவ்வாறான குற்றங்கள் பின்வரும் காரணங்களால் உருவாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a. தான்தோன்றித்தனமான சோம்பித்திரியும் வாழ்க்கை (Habitual vagrancy)
b. ஒழுங்கற்ற பாலுறவு (sexual promiscuity)
c. கடமையைச் செய்யாதுவிடல் (truancy)
d. கீழ்ப்படிவற்ற அல்லது திருத்தமுடியாத நிலை (inwrigibity incorigibibity)

ii. குற்றத் தொழில்
அற்பமான திருட்டுக்கள், கொள்ளை, கள்ளக்கையெழுத்திடல், தைரியமான சட்ட விரோத விளையாட்டுக்கள் என்பவற்றினை தங்களது தொழில்முறையாகச் செய்பவர்களோடு தொடர்பு பட்ட வகையிது.

iii. நிறுவமைப்புக் குற்றம்
நல்ல குடும்ப மனிதராக தங்களது பிள்ளைகளில் அன்பு மிக்கவர்களாக வெற்றிகரமான வியாபாரிகளாக ஒழுக்கமும் பக்தியும் கொண்டவர்களாக இருப்பவர்கள் தங்களது வியாபார முறைகளில் தொல்லைப்படுத்துவதையும், கொலை செய்வதை யும் கொண்டிருப்பார்கள்.

சூதாட்டம், போதைப்பொருட் கடத்தல், வரி ஏய்ப்பு, கடன் ஏமாற்றுதல், விபசாரம் என்பன இவ்வகைக்குற்றங்கள்.

iv. அரச அதிகாரிகள் குற்றமும் அரச குற்றமும்
வைத்தியர்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் பொது அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் இங்கு அரச உத்தியோகத்தர் குற்றங்கள் இவர்களது உத்தியோகத்துடன் தொடர்புபட்டது.
ஊழல், கள்ளக்கையெழுத்து, ஏமாற்றுதல் என்பன ஒரு சில மாதிரிக்குற்றங்கள் அதேபோல் அரச குற்றம் என்பது அரச நிறுவனங்களின் அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்துவதாகும்.

**குற்றத்தீர்வு**

வழமையாகவும் மரபுரீதியாகவும் கையாளப்பட்டு வருகின்ற குற்றங்களிற்கான சுலபமான தீர்வு, குற்றவாளி சிறையிலடைக்க ப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் குற்றவாளிகளுக்கான சூழல் பின்னணிகளின் அடிப்படையில் அவர்களின் குற்ற நடத்தையை ஆராய்ந்து குறித்த நடத்தைக்கான அடிப்படைகளை இனங்காண்பதும் அதற்கான மாற்றீடுகளை முன்வைப்பதுமே சமூக ஆய்வுகள் வேண்டி நிற்பதாகும்.

இதன் பின்னணியில்தான் குற்றவாளிகளுக்கான தண்டனையும், புனர்வாழ்வும் (கல்வியாகவும், உளச்சிகிச்சையாகவும் அமையலாம்) அமையவேண்டும்.

குற்றங்களை தடுப்பதற்குரிய செயல்திட்டங்கள் இங்கிருந்தே தொடங்கப்படவேண்டும். அதற்கான சட்டங்களும், நீதிமன்ற முறைமைகளும் சரியான முறையில் பரிசீலிக்கப்பட்டு மீளமைக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கெதிரான வன்முறை

இதுவரை கவனிக்கப்பெற்ற சமூக விவகாரங்கிலிருந்து இது சற்று வித்தியாசப்படுகிறது. சமூகக் கட்டமைப்புக்குள் கட்புலனாகா நிலையில் மரபுத் தொடர்ச்சியாக இந்த வன்முறை அனைத்து சமூகக்குழுக்களிடமும் இயங்கி வந்ததை, வருவதை உணரத் தொடங்கியுள்ளோம். அனைத்து சமூகங்களாலும் பெண்களுக்கெதிரான கட்புலனாகும், கட்புலனாகா வன்முறைகள் உணரப்படுகின்ற, புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தளத்தில் இதனை சமூக விவகாரமாக அடையாளப்படுத்திக் கொள்ளமுடியும்.

உலகம் முழுவதிலுமுள்ள பெண்களில் 1/3 பகுதியினர் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர். இதனை வறுமைப்புலத்தில் மட்டுமல்ல சகலவிதத்திலும் மேம்பாடடைந்த நாடுகளிலும் அடையாளங்கண்டுகொள்ள முடியும். சில புள்ளிவிபரங்கள் இதனை மேலெடுத்துக் காட்டுவதாக அமையும். அமெரிக்காவில் பெண்கள் உடல் ரீதியாக துன்புறுத்தப்படுவதால் அவர்கள் அலுவலகங்களுக்கு விடுப்புக்களை அதிகம் எடுக்கிறார்கள். இதனால் பொருளாதாரத்தில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்படுவதாக அங்குள்ள முதலாளிகள் தெரிவிக்கின்றனர்.

உலகெங்கும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, புற்று நோய், விபத்து, மலேரியா போன்றவற்றால் ஏற்படும் மரணங் களைவிட பாலியல் வன்புணர்வினால் ஏற்படும் மரணங்களே அதிகமானவை எனக் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் 50000 பெண்கள் பாலியல் வர்த்தகத்திற்காக அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்படுகின்ற னர். அமெரிக்க ஆய்வுகளின்படி அங்கு, இலத்தீன் அமெரிக்கா, கிழக்காசியப் பெண்களே அதிகமாக கடத்திவரப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை பாலியல் தொழிலுக்கும், ஆபாசப் புகைப்படத் தொழிலுக்கும் பயன்படுத்துகின்றனர். தாய்லாந்தில் மட்டும் இருபது வயதுக்குக் குறைந்த, பாலியல் சுரண்டலுக் குள்ளான பெண்கள் 8 லட்சம், இவர்களில் 25% ஆனவர்கள் பதினான்கு வயதிற்கும் குறைந்தவர்கள். மலேசியாவில் தனது கணவன்மாரின் துன்புறுத்தலுக்கு 10 பெண்களில் 4 பேர் ஆளாகின்றனர்.

இந்தக்குறிப்புக்கள் பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு பொதுச் சமூகப் பிரச்சினையாகக் கொள்வதற்குரிய சமூக வெளி யைத் தருகிறது.

**சமூகத்தில் பெண்கள்**

பெரும்பான்மையான பூர்வீக சமூகங்கள் தந்தைமை அமைப்பைக் கொண்டவை. இங்கு பெண்களின் நிலை ஆண்களால் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.
இந்த அமைப்புக்கான விழுமியங்கள் உண்டு.

ஒழுங்கான பாலுறவு, வம்சவிருத்தி, சமூக உற்பத்தி என்பன கட்டமைக்கப்பட்ட சமூகத்தில்பெண்களுக்கான விழுமியங்களா கின்றன. இதனடிப்படையிலேயே "பெண்" எனும் படிமம் வரையப்படுகிறது. இவை சடங்குப் பயில்வினூடாகவே நிலை நிறுத்தப்படுகின்றன.
"ஒரு பக்தியுள்ள மனைவி"
"சிரத்தையான தாய்"

எனும் நிலையிலான பாத்திரங்கள் உறுதியானதாய் வார்க்கப்படுகின்றன. பெண்களின் நடத்தைகள் எப்படியிருக்க வேண்டுமென்ற அடிப்படை விதிகள் மனு சாஸ்திரத்திலே உள்ளன. தனது கணவனை ஒரு கடவுளாக வணங்குதல், தனது கணவனில் தங்கியிருத்தல் என்பதுவும் தனது குழந்தைக்கு இரத்தம், பால், பாதுகாப்பு, ஊட்டமளித்து வளர்ப்பது என்பதுவும் இங்கு விதிக்கப்பட்டனவாய் இருந்துவந்துள்ளன.

இந்திய தொன்மங்கள் பெண்களை சீதை, சாவித்திரி, திரௌபதி, தமயந்தி எனும் புராண இதிகாச படிமங்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க விரும்புகின்றன. அதனையே சமூகங்களிடமும் எதிர்பார்க்கின்றன. இந்தந் தொன்மக் கட்டமைப்புக்குள் ஆண்மையச் சிந்தனையின் ஆதிக்கம் உணரக்கூடியதாக உள்ளதென்பதை பால்நிலைக் கற்கைகள் தெளிவுறுத்துகின்றன.

இப்படியான ஒரு தொடர்ச்சியைப்பேணி பெண்கள் தங்களின் பிரதான குறிக்கோளாக திருமணம் முடித்தல் எனும் இருப்பு வடிவத்தினை சமூகங்கள் இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன.

## வன்முறைகள்

பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஆணாதிக்கத்தன்மையினால் ஏற்படும் ஆக்கிரமிப்பு மனோபாவம், அதனால் ஏற்படுகின்ற வலுத்தாக்குதல் என்பவற்றால் உருவாகுபவை.

ஆண்மையச் சிந்தனையின் வெளிப்பாடே பெண்களுக்கு எதிரான வன்முறை என பெண்ணிய வாதிகள் குறிப்பிடுவர்.
இங்கு மூன்றுவகையான வன்முறைகளைக் குறிப்பிடுவர்

1. வார்த்தை வன்முறை
2. உடல் வன்முறை
3. உள வன்முறை

**வார்த்தை வன்முறை**

இங்கு வார்த்தைகளால் பெண்களை சித்திரவதைக் குள்ளாக்குவது. உரத்த தொனியிலும் வெறிகொண்ட பாவனையிலும் பெண்களை அடக்குவதற்காக,

"எனக்கு அடுத்த நிலையான பாத்திரத்தை வகிக்கிறாய்" என்பதை மீள உறுதிப்படுத்துவதற்காய் இந்த வன்முறைப் பிரயோகம் நிகழ்கிறது. எனினும் தொன்மச் சமூகங்களால் கட்டமைக்கப்பட்ட வடிவங்களின் வெளிப் பாடாகவே இதனை கொள்ள முடியும். இங்கு "மனைவி", "தாய்", "மகள்" என்ற வேறுபட்ட நடிபங்கு வகைக்குள் பெண்கள் எதிர் கொள்ளும் வார்த்தைகள், பெண்களால் வன்முறை என உணரப்படுகின்ற போது அது வன்முறையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடலை மையப்படுத்திய சித்திரவதை**

- "பெண்" எனும் உடல்கூறு வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு பிரயோகிக்கப்படும் வன்முறை வடிவங்கள்.
  "பெண் எனும் மாயப்பிசாசு" - தாயுமானவர்
  "உண்டி சுருங்குதல் பெண்டிருக்கு அழகு" - ஆத்திசூடி
  இவை தொன்மக் கதைகளுக்கூடாக மீள மீள பெண்களை இம்சைப்படுத்தும் "சொல்லப்படுபவை" ஆகும்.
- ஆண், பெண் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பாரபட்சம் அவர்களின், உணவு, உடை, கல்வி போன்ற வாய்ப்புக்கள் இதனை எடுத்துக்காட்டும்.
- சிசுவதை, சமூக அமைப்புகளில், அதன் பொருளாதார மையச் சிந்தனையின் கட்டமைவுப்படி பெண் குழந்தைகள் பாரத்திற்குரியவர்களாக, வேண்டப்படாதவர்களாக பார்க்கப் படுகிறார்கள். அதன் பயனாகவே பெண்குழந்தை களை சிசுவிலேயே கொன்று விடும் வழக்கம் சில இந்திய மரபுச் சமூகங்களில் இனங்காணக் கூடியதாக உள்ளது.
- பெண்களின் உடலை, பாலியல் சிந்தனையுடன் அணுகி அவர்களை சீண்டிப்பார்க்கின்ற மனோபாவத்தில் அல்லது ஆசை வெறிகொண்ட உற்றுப்பார்த்தலின் (Gaze) அடிப்படை யில் நிகழ்த்தப்படும், உணரப்படும் சித்திரவதை.
- மேற்சொன்ன வகையிலேயே பெண்களை பாலியல் தொந் தரவுக்கு உள்ளாக்குதல். அவர்களை உறவு கொள்ளும்படி கட்டாயப்படுத்துதல்.
- பாலியல் உறவு, வன்புணர்வுக்காகவும், பாலியல் வர்த்தகக் தொழிலுக்காகவும் பெண்களை கடத்துதல்.
- மனைவியை அடித்தல்
- பொய்கள் கூறி ஏமாற்றித் திருமணம் செய்தல்
- திருமணமான பெண்கள் மீதான வக்கிர மனோபாவம்
- பாலியல் வன்புணர்வு
- மானப்பங்கப்படுத்தல்
- இளம்பெண்கள் மீது தவறான அவதூறுகளை ஏற்படுத்துதல்
- விபச்சாரத்திற்கு தூண்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள ரீதியான துன்பம் கொடுத்தல்**

- ஆண் பெண் குழந்தைகளை பாரபட்சமாக நடத்துகின்றபோது, பெண்குழந்தை தனது சகோதரனை விட தான் கீழாக நடத்தப்படுவதாக உணருதல்.
- வீட்டில் கூட்டி, கழுவும் வேலைகள் தானே செய்தல், உடல் பருமனாகிவிடும் என உணவு குறைத்தல், வயசுக்கு வந்ததன் பிற்பாடு கட்டுப்பாடுகளை உணரல் போன்வற்றினால் பெண் குழந்தையின் மனம் தான் ஒதுக்கப்படுவதாக/பாரபட்சப படுத்தப்படுவதாக உணருதல்.
- பெண்கள் வேலைக்குப் போவதை தடைசெய்தல்.
- சமத்துவமற்ற வாய்ப்புக்கள்

  சமூக அமைப்புக்குள் இதன் வடிவத்தை உணரலாம். பொதுநிலையில் கல்வி, வேதனம் போன்றவற்றில் இந்நிலை மாறிவருகிறது. கூலித்தொழில் செய்யும் பெண்களின் கூலி பாரபட்ச நிலையிலுள்ளது.
- "சீதனம்" எனும் சமூக முறைமை பெண்களை மனரீதியாக பாதிப்பதாக அமைகிறது.

இப்படியான வன்முறைகளின் விளைவாக, சமூக நோயியல் தன்மையை இனங்காணமுடியும். இந்த வன்முறை வடிவங்கள் குடும்ப மட்டத்தில் விவகாரமாகின்றபோது சமூக ஒழுங்கமை வின்மை தோன்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம். குடும்ப கட்டமைப்பு உடைந்துபோதல், தற்கொலை, மனப்பாதிப்பு போன்ற எதிர்நிலை விளைவுகள் சமூக வலைப்பின்னலை உடைத்து விடுகிறது.

பெண்ணுடலுக்குள்ள கீழான மதிப்பும், பெண்ணை பாலியல் பொருளாகப் பார்க்கின்ற வடிவமும் மாறுவதற்கான சமூகச்சூழலை உருவாக்க வேண்டிய தேவை சமூகச் சிந்தனையுடையவர்களிடம் தேவை.

பெண்களை தண்டனைக்குட்படுத்தும் குரோத மனப்பாங்காக இன்று பாலியல் வன்புணர்வு காணப்படுகிறது. ஒரு இனத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை பழிவாங்கும் வடிவமாக பாலியல் வன்புணர்வு பயன்படுகிறது.

ருவாண்டாவில் நடைபெற்ற சிவில் யுத்தத்தின் போது 250,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்புணர்வுக் குள்ளாக்கப்பட்டார்கள். பலரின் உடல் பாலியல் சிந்தனையுடன் சிதைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டன. இதனை இலங்கையின் "முள்ளிவாய்க்கால் யுத்தம்" என சுட்டப்படும் காலத்திலும் அடையாளங்காண முடிந்ததாக மனித உரிமை ஆர்வலர்கள் குறிப்பிடுகிறார்கள். பெண்களை ஆயுதமாக பயன்படுத்தும் மனோபவம் என்பதுவும் ஆண்நிலைப்பட்ட ஒரு வடிவந்தான். ஓர் ஆரோக்கியமான சமூகச் சூழலை ஏற்படுத்த "இரண்டாம் பாலினமாக" கருதப்படும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எப்போதும் தடையாகவே இருக்கும்.

பெண்கள் தங்களுக்கெதிரான வன்முறைகளிலிருந்து தற்காலிகமாக பாதுகாப்பினை பின்வரும் வழிமுறைகளினூடாக பெற்றுக் கொள்ளலாம் என கூறப்படுகிறது.

1. தனிப்பட்ட தங்களின் உத்திகள்
   - கதைத்தல், வாக்குறுதியளித்தல், வலிமையான எதிர் கொள்ளல், தவிர்த்தல்
2. முறைசாராத உதவி வடிவங்களை பாவித்தல்
   - குடும்ப அங்கத்தவர்கள், மாமா, மாமி (கணவனிடமிந்து), அயலவரிட மிருந்து, நண்பர்கள்,
3. முறைசார்ந்த உதவி வடிவங்கள்
   - பொலிஸ், சமூகசேவை நிறுவனங்கள், மாவட்ட நீதிமன்று.

இது ஒரு உடனடி விடுபடுதல் முறையாகவே அமையும் சமூக அமைப்பின் வேரோடியுள்ள தொன்மக்கூறுகள் அடிக்கடி மேற்கிளம்பிய வண்ணமே இருக்கும்.

கார்ல் மாக்ஸ் கூறிய சுரண்டல், அந்நியமாதல் வடிவங்களை இங்கு அடையாளப்படுத்தமுடிகிறது. எனவே மார்க்ஸிய அணுகு முறையில் உடனடி மாற்றத்தை வேண்டுகின்ற சமூக மாற்றம் தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை

தற்கொலை என்பது தனியனை மையப்படுத்திய பிரச்சினை எனினும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லதும் சமூகவலைப் பின்னலை சிக்கலுக்குள்ளாக்கும் விவகாரமாக அமைகிறது. தன்னுடைய வாழ்வை முடித்துக்கொள்வதற்காக பிரக்ஞை நிலையில் தன்னைத்தானே அழித்துக்கொள்ளலை தற்கொலை எனலாம்.

தற்கொலை என்பது நோக்கத்துடனான சுயமாக ஏற்படுத்திக் கொள்ளும் மரணமாகும்.

- *எட்வின் ஷினைட்மென்* (Edwin Shneidmen)

சமூகத்தில் ஒருவர் எதிர்நோக்கும் பிரச்சினை, வேறு எவ்வகையிலும் தீர்க்க முடியாது என்ற எண்ணத்தில் இறுதியாக எடுக்கும் முடிவு தற்கொலை.

- *பெசில் பென்சல்* (Bessil Benzel)

இதன் விளைவு எவ்வாறிருக்கும் என்ற பூரண விளக்கமுடைய ஒருவரால் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனக்கு ஏற்படுத்தும் மரணமாகும்.

- *எமில் துர்கைம்* (Emile Durheim)

தற்கொலை மூன்று கொள்கைகளினடிப்படையில் பார்க்கப் படலாம்.

1. உளவியக்கவியல் கொள்கை.
2. உயிரியல் கொள்கை.
3. சமூகவியல் கொள்கை.

**உளவியக்கவியல் கொள்கை**

தற்கொலை என்பது உளச்சோர்வின் நிலையாக இருந்துள்ளதை காண்கிறது. சுயம் நோக்கிய கோபத்தின் தொடர் விளைவாகவும் இதனை இக்கொள்கையாளர் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அடிப்படையான சாவூக்கத்தை (Thanatos) கொண்டுள்ளனர் என பிராய்ட் கூறுகிறார்.

ஃபிராயிடின் கூற்றினடிப்படையில், ஒரு மனிதனுடைய மனதில் வாழும் ஆசையும் சாகும் ஆசையும் அடிப்படையாகச் செயற்பட்டு அவனை எதிரெதிர் திசையில் செயற்பட்டு ஒன்றையொன்று ஆதிக்கம் கொள்ள சண்டையிடுகின்றன. மக்களுள் அநேகர் சாவூக்கத்தை மீளத்திருப்புவதற்குப் பிறர்மீது பிரயோகிப்பதற்கும் கற்கின்றனர். அதன்போது "தற்கோபம்" எனும் பொறிக்குள் சிக்கிவிடுகின்றனர். அதனால் சாவூக்கம் அவர்கள் மீதே திரும்புகிறது. ஆனால் எல்லாத் தற்கொலைகளும் தற்கோபத் தினால் நிகழ்வதில்லை என்பதனையும் புரிந்து கொள்ளவேண்டும்.

## உயிரியல் கொள்கை

இக்கொள்கையாளர்கள் குடும்ப முறைமை மற்றும் குடும்ப உறவு வலைப்பின்னலை ஆய்வுக்குட்படுத்தி உயிரியற் காரணிகள் தற்கொலையில் பங்காற்றுகின்றன என்கிறார்கள்.

பரம்பரைக் காரணிகளின் செல்வாக்கு இதில் உணரப்படு வதாக சொல்லப்படுகின்றது. ஒருமனிதனால், மனவெழுச்சியைத் தூண்டக்கூடிய நரம்புத்தொகுதியால் கடத்தப்படும் இரசாயனப் பதார்த்தத்தினளவு குறைவடைகிறபோது அவர் தற்கொலைக்கு முயற்சிக்கிறார் என உயிரியற் கொள்கையாளர்கள் ஆய்வுகூட பரிசோதனையில் பெறப்பட்ட முடிவாக முன்வைக்கின்றனர்.

இத்தகைய நிலை செயற்பாட்டினுடைய ஆக்கிரமிப்பு மனச்சிக்கல்களை உருவாக்குகிறது என்றும் அதனால் தற்கொலை தொடர்பான செயல்முனைப்பு ஏற்படுகிறதென்றும் கூறப்படுகிறது.

## சமூகவியல் கொள்கை

ஒரு வளர்ச்சிப் படிமுறையில் தம்மால் நேசிக்கப்பட்ட ஒன்றை இழந்து சமூகத்தவரின் எதிர்பார்ப்புக்கு மாறாக சிந்திக்கிற போது தற்கொலை முனைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன என சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். இவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலைக்கான அடிப்படைகளை சமூகமே கற்றுக்கொடுக்கின்றது, தூண்டுகிறது என்பதனை சமூகவியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

தற்கொலை தொடர்பான ஆய்வுநிலை நோக்குகளில் தற்கொலையுடன் தொடர்புபட்டுள்ள ஊக்கக்காரணிகள், உள சமூகத்தூண்டிகள், சூழல்சார் நிபந்தனைகள் என்பவற்றில் சமூக கொள்கையாளர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

**தற்கொலை பற்றிய சமூகவியல் நோக்கு**

சமூகச் சூழலே ஒருவரை தற்கொலைக்குட்படுத்துகிறது என்பது ஒரு அடிப்படையான எண்ணக்கரு.

> ஒருவர் மற்றவரை கொல்லும் விருப்பத்திற்காகவோ அல்லது குறித்த பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்வதற் காகவோ தற்கொலைக்கு முனைகிறார். ஏமாற்றமெனும் இயற்கைத் தூண்டுதலுக்குட்பட்டு தனது ஏமாற்றத்துக்கு காரணமானதை அழிக்க முயல்கிறார், சமூகம் இதனை எதிர்க்கிற போது அதற்குப் பதிலாக தற்கொலையை தான் தப்பித்துக் கொள்ளும் உபாயமாகக் கொள்கிறார்.
>
> - ரொல்பி

> மன அழுத்தம் உண்டாகக் காரணமாக இருக்கின்ற எதிர்காலம் தொடர்பான பயம், தாழ்வு மனப்பான்மை, வெறுப்பு, குற்றவுணர்ச்சி என்பவற்றால் தற்கொலை நிகழ்கிறது.
>
> - டப்ளின் (Dublin), பென்சல் (Benzal)

> ஒருவர் தனக்கேற்படும் நெருக்கடிகளிலிருந்து விடுபட பல தீர்வுகளைக் காண்கிறார். சிலர் சாதாரண வாழ்வை திறமையாகப் பின்பற்றி சமாளிக்கின்றனர். சாதாரண வழியில் தீர்க்க முடியாதால் அதிருப்தி, அமைதியின்மை, சமூகத்திற்கேற்ப தன்னை மாற்ற முடியாத தன்மை என்பன ஏற்படுகின்றன. இது மதுபாவனை, போதை, தவறான பாலுறவு, மனநோய், இளங்குற்றவாளி, தற்கொலை என வெளிப்படுத்த காரணமாகிறது.
>
> கெவன் ருத் (S.Cavan Ruth)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலைக் கோட்பாடு மூன்று வகைப் பாட்டைக் கொண்டது. ஆனாலும் நவீன கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி நான்காக இனங்காணப்படு கின்றமை குறிப்பிடத் தக்கது. 1897இல் வெளியிடப்பட்ட இவரின் ஆய்வினடிப்படையிலான வகைப்பாடு இது.

1. அகநிலைத் தற்கொலை (Egoistic suicide)
2. நியமமறுநிலை தற்கொலை (Annomic Suicide)
3. உன்னத தற்கொலை (Altruistic Suicide)
4. விதிவசப்பட்ட தற்கொலை (Fatalistic Suicide)

– துர்கெய்ம் (Durkheim)

இவை நான்கும் ஒருவர் சமூகத்துடன் கொண்டுள்ள ஊடாட்டத்தின் அடிப்படையைக் கொண்டு கூறப்படுவதாகும்.

### அகநிலைத் தற்கொலை

இவ்வகையான தற்கொலைகளை எந்தக் கட்டுப்பாட்டையும் கொண்டிராத அல்லது சிறிதளவு கட்டுப்பாட்டைக் கொண்ட சமூகங்களில் இனங்காண முடியும்.தன்னலம் பற்றிய ஆணவம் வெளிப்படுகின்ற இவ்வகைத் தற்கொலை, தனிமனிதன் குழுவாழ்வில் குறைவாகப் பங்குகொள்வதால் ஏற்படுகிறது. குறிப்பாக குழு ஒற்றுமை குலைதல், கூட்டுப்பிணைப்பின் உறுதியின்மை சமூகத் தொடர்பின்னை என்பவற்றால் உண்டாகிறது. தன்னுள்ளே தன்னை மறைக்கும் சுபாவத்தினால் ஏனை யோருடன் இயைந்து போக முடியாத சூழல் ஏற்படுகிறது. இதனால் மிகவும் உளப்பாதிப் படைந்த நிலையில் இவ்வகையான தற்கொலை நிகழ்கிறது.

### நியமமறு நிலைத் தற்கொலை

திடீரென ஏற்படுகின்ற சமூக மாற்றங்களினால் உண்டாவது. மாற்றமடைந்த சமூகத்தில் தன்னால் சீராக வாழ முடியாது என்ற எண்ணத்தில் நிகழ்வது.

சமூக நெறிகள் வழக்கிழந்து, சமூக நடவடிக்கைகள் கட்டுப்படுத்த முடியாமல் இருந்து, சமூக நடுநிலை, அமைதி என்பன பாதிக்கப்பட்ட நிலையில் இவ்வகைத் தற்கொலை நிகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இத்தகைய சமூக நிலையால் நியமமறு நிலை ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் வெறுமையுணர்வு உயர்ந்த வீதத்திலான தற்கொலை விருப்பை தனிநபருக்கு வழங்குகிறது என துர்கெய்ம் கூறுகிறார்.


**உன்னத தற்கொலை**

ஏனையோரின் நல்வாழ்விற்காக தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் நிலை இதுவாகும். இத்தகைய சமூக நோக்கினடிப்படையிலான தற்கொலையை பிறருக்காக வாழும் நிலைத் தற்கொலை என துர்கெய்ம் குறிப்பிடுகிறார். இவை, கடமை அல்லது விருப்பினடிப் படையில் தன்னைத்தானே தியாகம் செய்து கொள்ளுகின்ற நிலையை உள்ளடக்கியது.

**தூண்டப்படும் தற்கொலை**

இது அனோமி தற்கொலைக்கு எதிரான நிலையைக் கொண்டது. ஒரு தனிநபரின் மீது ஒரு குழு அதிகரித்த கட்டுப் பாட்டை விதித்து நெருக்கடியை கொடுக்கின்றபோது அந்நபரின் சகிப்புத் தன்மை எல்லை கடக்கும்போது நிகழும் தற்கொலை வடிவமாகும்.








மேலே காட்டப்பட்ட வரைபடங்களின் அடிப்படையில் ஏதாவது ஒரு நிலை அதிகமாகவோ, குறைவாகவே இருந்தால் அது தற்கொலையை உருவாகுவதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்கொலையை விளங்குவதற்கான சமூகப்பிரச்சினைகளை மையப்படுத்திய காட்டுரு.**




இன்று யுத்ததிற்கு பின்னான சூழலில் தற்கொலைகள் எமது சூழலில் அதிகரித்திருப்பதை உணர்ந்திருக்கிறோம். அனைவரும் தற்கொலை எனும் சமூகப் பிரச்சினையின் அடிப்படைகளை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தற்கொலை மற்றும் அதற்கான முயற்சிகள் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் (குடும்பம், சகபாடி, மாணவர், சிறுவர், பெண்கள்) பெரியளவிலான மனவெழுச்சியை தோற்றுவித்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலையின் விளைவுகளை அதன் சமூகப் பின்னணி களை விளங்கிக் கொள்வதற்கான தேவை அல்லது அதற்கான சமூகப் பிரக்ஞை பற்றிய தேவை அதிகரித்திருக்கிறது. தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இவர்களில் **15-30** வயது வீச்சுக்குள்ளிருப்பவர்களே அதிகமாக இருப்பதாகவும் குறிப்பாக பெண்கள் 60% ஆனவர்களாக இருப்பதாகவும் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய கணிப்புகள் சொல்கின்றன. மாணவர்கள் மத்தியில் தற்கொலைக்கான எண்ணங்கள் முளைக் கின்றன.

இவை எமது சமூகத்தின் ஒழுங்கமைவின்மை தொடர்பான கேள்வியை ஏற்படுத்துகிறது. இங்கு நியமறுநிலை, விலகல் நடத்தை, சமூக ஒழுக்கமைவின்மை எனும் சமூக விவகார அணுகு முறை மட்டங்களை பிரயோகப்படுத்துவதனூடாக சமூகத்தின் எந்தப் புள்ளிகளில் இதற்கான பிரச்சினை மையக்கொண்டுள்ளது என ஆய்வு செய்ய வேண்டும்.

போரின் பின்னான சூழலில் மன அழுத்தங்களுக்கு உள்ளானவர்களும், ஒதுங்கி வாழ்பவர்களும் ஒதுக்கப்படு பவர்களும், எதிர்காலம் பற்றிய பயங்களை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கொண்டுள்ளவர்கள் அதிகரித் திருக்கிறார்கள்.

அதனைவிட திறந்த இலத்திரனியல் பாவனை மாணவர் களை தவறான பாலியல் நடத்தைகளுக்கு கொண்டு செல்கிறது. இதனால் இவர்களுக்கு ஏற்படும் கற்பனை வாழ்வு, கர்ப்பம், ஒழுக்கக்கேடு பற்றிய குற்றவுணர்வு அதிகரித்திருக்கிறது. இதன் இறுதிக்கட்டம் தற்கொலையாக முடிந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

இதற்கான மாற்றீடு சமூகத்தின் கைகளிலேயே உள்ளது. சமூகத்தின் கட்டமைப்பு மீள்பரிசீலனைக்குட்படுத்த வேண்டிய தேவையும் அதனுடன் தொடர்புபட்ட சமூக நிறுவனங்களின் சமூக அக்கறையுடனான இயக்கமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தற்கொலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்திலேயே காட்டுருவில் காட்டப்பட்டுள்ள சமூகப்பிரச்சினை களின் பாதையை 3ம் நிலை **2**ம் நிலை **1**ம் நிலை என்ற படிமுறையில் அணுகி அவற்றை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகளை அரச இயந்திரமும், சமூக ஆர்வலர்களும் திட்டப்படுத்தி முன்னெடுக்க வேண்டும்.

போரின் விளைவுகளும், வறுமையும் கணிசமான அளவு குறைக்கப்படுகின்றபோது அதற்கேற்ற வகையில் தற்கொலையின் வீதமும் அதிகளவில் குறைந்து போவதற்கு வாய்ப்புக்களுண்டு. இதனைவிட சமூகத்தின் மனவளத்தை பேணத்தக்க அல்லது காத்திரமாக அதிகரிக்கத்தக்க உளவியல் அணுகுமுறைகளின் அவசியத்தையும் உணர முடிகிறது. குறிப்பாக பாடசாலை மட்டங்கள், அலுவலக மட்டங்கள், குடும்ப மட்டங்கள் என்று செயற்படுத்துவதற்கான களங்கள் திறந்தேயிருக்கின்றன.

ஆரோக்கியமான ஆன்மீக, இலக்கிய, பொழுதுபோக்கு இணைந்த மனவளப் பயிற்சியை திட்டப்படுத்தி விரிவாக்கும்பணி, மன நலவைத்தியர்கள், சமூக உளவியலாளர்கள், சமூகப்பணியாளர் கள், மதகுருமார்கள் என அனைத்து தரப்பினரிடம் உண்டு. அதற்கேற்ற தகுந்த பயிற்சி நடைமுறைகள் இளம் சமுதாயத்தினை ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி நகர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணைகள்


1. Mcveigh, FrankJ, *Modern Social problems,* Newyork, Rine hart and winston, 1978

2. Henslin.M, James, *Social Problems: a Down to Earth approach,* 2008

3. Turner.S, Bryan, *The Cambridge Dictionary of Sociology,* Cambridge University press

4. Morhen Leslie.A, Kunkel Suzanre, Aging - *The Social Context,* Pine Forge Press, 2nd edition, 2001

5. *வைத்திய கலாநிதி வசந்த தேவராஜா, ஸ்ரீஸ்கந்தராஜா, முதியோரைப் பராமரிக்கும் அறிவியல், 2004*

6. Haralambos.M with RM Heald, *Sociology: Themes and Perspectives,* Oxford University Press, 2003

7. David J. Hanson, *History of Alcohol and Drinking Around the World (HADW)*, 1995.

8. Raw shangar C.N., *Sociology: Primary Principles of Sociology with an Introduction to Social Thought*, 1993

9. Beth.B Hess, Myra Marx Ferree, Analysing Gender: *A hand Book of Social Science research*, Sage Publications, 1987

10. Durheim emile, suicide: *A Study in Sociology*, London, 1952

11. T. Ganeswaran, *Suicide and attempted Suicide*, inaugural Lecture, Jaffna, 1989




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"விஞ்ஞான ஆராய்ச்சி எப்பொழுதும் பிரச்சினை களிலிருந்தே ஆரம்பமாகிறது. பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணவேண்டும் எனில் முதலில் அதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். விளக்கம் தீர்விற்கான முன் நிபந்தனையாகும்"

- கார்ல் பொப்பர்

ISBN 955543040-1

9 789555 430401

Har...n (Pvt.) Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org